Registered as a Newspaper

பக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 17 | ( 02-12-93 ) | வியாழக்கிழமை | ஓசை 287

## பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர் வைத்திருப்பது சட்டவிரோதம்

அரசாங்கப் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களை வைத்திருப்பது சட்ட விரோதமானது என கல்விச்சபை அறிவித்துள்ளது. மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் உடனடியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பிரதேச கல்வி அலுவலகங்களுக்கும் இது தொடர்பாக கல்விச் சபை தெரிவித்துள்ளது. ஒரு குறிப்பிட்ட பாடத்தில் குறைவான பாட நேரங்களைக்கொண்ட ஆசிரியர்கள் மேலதிக ஆசிரியர்களாகக் கணிக்கப்படுவார்கள். ஆசிரியர் பற்றாக்குறையை போக்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்றும் மேலதிக ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களை இடமாற்றும்போது அவருக்குப் பதிலாக (6-ம் பக்கம்பார்க்க)

# உலக ஆயுத விநியோகஸ்தர்கள் கொழும்பு நோக்கிப் படை எடுப்பு!

## புதிய ஆயுத தளபாட கொள்வனவு ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளப் போட்டி

(கொழும்பு)

**சிறிலங்கா இராணுவத்திற்கு அண்மையில் ஏற்பட்ட பாரிய ஆயுத தளபாட இழப்பைத் தொடர்ந்து பெருமளவு ஆயுதக் கொள்வனவு ஒன்றை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. இவ் ஆயுதக் கொள்வனவில், டாங்கிகள், கவசவாகனங்கள், துருப்புக் காவிச் செல்லும் கவசவண்டிகள் உட்பட பல தளபாடங்கள் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசின் இவ் ஆயுதக் கொள்வனவு முடிவைத் தொடர்ந்து அதற்கான விநியோக உரிமையைப் பெற்றுக்கொள்ளவென உலக ஆயுத விற்பனையாளர் பலர் கொழும்பு நோக்கிப் படையெடுத்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.**

இப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்றில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வியினாலும், பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலினாலும் சமீபகாலத்தில் இராணுவம் பெருமளவு ஆயுதங்களை இழந்துள்ளது.

சுமார் 350 மில்லியனுக்கு அதிகமான பெறுமதிவாய்ந்த ஆயுதங்களை சமீபகாலத்தில் சிறிலங்கா இராணுவம் இழந்துள்ளது. இதனால் உலக ஆயுத விற்பனையாளர்களின் பார்வை சிறிலங்கா அரசாங்கத்தின் மீது விழுந்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் புதிதாக கொள்வனவு செய்யவுள்ள ஆயுதத் தொகுதியின் ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்ள இவர்கள் கொழும்பை நோக்கி படையெடுக்கிறார்கள்.

இது தொடர்பாக கடந்த வாரம் ஆயுத விற்பனையாளர் மத்தியில் இராணுவஉயர் மட்டத்தின் தேவைகள் பற்றி இரகசிய ஆவணம்ஒன்று உலாவியது. இதனைத்தொடர்ந்து இந்த ஆயுத விற்பனையாளர்களின் உள்ளூர் முகவர்கள் தங்கள் வெளிநாட்டு முகவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர். சிலர் கொழும்பிற்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இரகசியமாக உலாவிய இந்தஆவணத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கு தற்சமயம் தேவைப்படும் ஆயுதங்கள் பற்றிய விபரம் வருமாறு;

ஃ தென்னாபிரிக்கா தரத்தி (6ஆம் பக்கம் பார்க்க)

## டாங்கிகளை இழந்தது பெரும் வெட்கக்கேடு!

-சிசில் வைத்தியரெட்ன

## பூநகரியில் மொத்தம்

2560

## உயர்தரப் பரீட்சை முடிவு வெளியானது

(கொழும்பு)

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைமுடிவுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆதர்வெதமுல்ல அறிவித்துள்ளார் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை முடிவுகள் இன்று தபாலில் சேர்க்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை அகதிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் பேரணிக்கு ஏற்பாடு!

(சென்னை)

இலங்கை அகதிகளுக்கு ஆதரவாக பெரும் பேரணியொன்றை தமிழகத்தில் இந்திய - இலங்கை நட்புறவு சங்கம் நடத்தவுள்ளது. இப் பேரணி ஜனவரிமுதல் வாரத்தில் மதுரையிலிருந்து புறப்படும் பேரணி மண்டபம் அகதிமுகாம் வரையில் செல்லும்இங்குஅகதிகளுக்குசங்கம் நிவாரணப் பொருளகளை வழங்கவுள்ளது.

கடந்த மே மாதம் அகதிமுகாம்களுக்கு எந்த உதவி அமைப்புகளும் செல்லக்கூடாது என தமிழக அரசு விதித்த தடையை மீறியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக இச் சங்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கையில் ஐ நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தவறான முறையில் நடந்து கொண்டதாகவும் இந்திய - இலங்கை நட்புறவுச் சங்கம் கண்டித்துள்ளது. இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டவர்கள் பாதுகாப்பாக குடியமர்த்தப்பட்டனரா என்பதை யூ என்.எச்.சீ.ஆர் விசாரித்துப் பார்க்கவில்லை எனவும் இலங்கையில் நிலவும் நிலைமைகளை அகதிகள் திரும்பிச் செல்ல (6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய கல்விப்பணிப்பாளர் நேற்று பொறுப்பேற்பு

(நமது நிருபர்)

யாழ் கல்விப் பணிப்பாளராக செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் தமது கடமையை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்றுமாலை யாழ். கல்வித் திணைக்களத்தில் பணிப்பாளரின் அலுவலகத்தில் அவரைச் சந்தித்த எமது அலுவலகச் செய்தியாளரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். வடக்குக் கல்விப் பணிப்பாளராக நியமனம்

அவர்களின் அலுவலகம் தற்காலிகமாக யாழ். கல்வித் திணைக்களத்திலேயே இயங்கி வருவதாகவும் யாழ். வடக்கு பகுதிக்கு கல்விப்பணிமனை ஒன்று திறக்கப்படும் வரை (6ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை வினாத்தாள்கள் ஒரு தொகுதி இன்று வரும்

(நமது நிருபர்)

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெற இருக்கும் பரீட்சைக்கான முதலாம் தொகுதி வினாத்தாள்கள் இன்று யாழ். கல்வித்திணைக்

கள், துருப்புக் காவிச் செல்லும் கவசவண்டிகள் உட்பட பல தளபாடங்கள் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசின் இவ் ஆயுதக் கொள்வனவு முடிவைத் தொடர்ந்து அதற்கான விநியோக உரிமையைப் பெற்றுக்கொள்ளவென உலக ஆயுத விற்பனையாளர் பலர் கொழும்பு நோக்கிப் படையெடுத்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்றில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வியினாலும், பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலினாலும் சமீபகாலத்தில் இராணுவம் பெருமளவு ஆயுதங்களை இழந்துள்ளது.

சுமார் 350 மில்லியனுக்கு அதிகமான பெறுமதிவாய்ந்த ஆயுதங்களை சமீபகாலத்தில் சிறிலங்கா இராணுவம் இழந்துள்ளது. இதனால் உலக ஆயுத விற்பனையாளர்களின் பார்வை சிறிலங்கா அரசாங்கத்தின் மீது விழுந்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் புதிதாக கொள்வனவு செய்யவுள்ள ஆயுதத் தொகுதியின் ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள இவர்கள் கொழும்பை நோக்கி படையெடுக்கிறார்கள்.

இது தொடர்பாக கடந்த வாரம் ஆயுத விற்பனையாளர் மத்தியில் இராணுவஉயர் மட்டத்தின் தேவைகள் பற்றி இரகசிய ஆவணம்ஒன்று உலாவியது. இதனைத்தொடர்ந்து இந்த ஆயுத விற்பனையாளர்களின் உள்ளூர் முகவர்கள் தங்கள் வெளிநாட்டு முகவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர். சிலர் கொழும்பிற்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இரகசியமாக உலாவிய இந்தஆவணத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கு தற்சமயம் தேவைப்படும் ஆயுதங்கள் பற்றிய விபரம் வருமாறு;

ஃ தென்னாபிரிக்கா தரத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

# டாங்கிகளை இழந்தது பெரும் வெட்கக்கேடு!

-சிசில் வைத்தியரெட்னா

(கொழும்பு)

கவசப்படையிலிருந்து பதவி உயர்வுபெற்றுஉயர்வடைந்த தான் பூநகரி யுத்தத்தில் புலிகள் இரண்டு யுத்த டாங்கிகளைப் பிடித்துச் சென்ற சம்பவம் குறித்து வெட்கப்படுவதாக இராணுவத் தளபதி கூறியதாக சண்டே ரயிம்ஸ் இராணுவச் செய்தியாளர் எழுதியுள்ளார்.

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலின்போது பலாலி முகாமுக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா, மூத்த அதிகாரிகளிடம் இவ்வாறு கூறியதாக சண்டே ரயிம்ஸ் இராணுவச் செய்தியாளர் எழுதியுள்ளார்.

புலிகள் இரு யுத்த டாங்கிகளைப் பிடித்துச் சென்றதை தம்மால் நம்ப முடியவில்லை என்று கூறிய இராணுவத் தளபதி, குழப்பமாகவும், கோபத்துடனும் பலாலி முகாமில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பூநகரியில் மொத்தம் 2560 படையினர் இருந்தனர்

– ரணில்

(கொழும்பு)

பூநகரி படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்ட போது முதலாவது சிறிலங்கா இலகு காலாட்படை அணியும், மூன்றாவது கஜபாபடையணியும் அங்கு நிலைகொண்டிருந்ததாகவும் மொத்தம் 56 இராணுவ அதிகாரிகளும், 2236 ஏனைய தரத்தைச் சேர்ந்த இராணுவ சிப்பாய்களும் இதில் இருந்ததாகவும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் நாகதேவன்துறை கடற்படைத் தளத்தில் 268 கடற்படையினர் நிலைகொண்டிருந்ததாகவும் இவர்களில் சிலர் இராணுவத்தினருடன் இணைந்து காவல் கடமையில் ஈடுபட்டிருந்ததாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

காங்கேசனில் 'ரணகஜா' தரித்திருந்தும்

# புலிகளின் எதிர்ப்பால் பூநகரியில் ராணுவம் தரையிறங்க முடியவில்லை!

(கொழும்பு)

பூநகரி இராணுவத் தளம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குள்ளானபோது சிறிலங்கா கடற்படையின் பாரிய ஆளணி இறக்கும் கப்பலான ரணகஜா காங்கேசன்துறை துறைமுகத்திலேயே நின்றபோதிலும், சில அச்சுறுத்தல்கள் காரணமாகபடையினரை அதில் அனுப்பிவைக்க முடியவில்லை. இவ்வாறு ஐலண்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்த சுமார் 300 அதிரடிப்படையினர் பின்பு இந்த கப்பலில் பலத்த டோரா படகுகளின் பாதுகாப்புடன் பூநகரி அருகே கல்முனை சென்றடைந்தபோது அவர்களினால் தரையை எட்டமுடியவில்லை அதற்கு கரையிலிருந்து புலிகள் மேற்கொண்ட கடும்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப் போராட்டம் அணு ஆயுதபோருக்கு வழிகோலலாம்!

ரஷ்ய இராஜதந்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் தமிழர்கள் நடத்திவரும் பிரிவினைப் போர் அணுவாயுதங்களை இப்போரில் உபயோகிப்பதற்கான சந்தர்ப்பங்களுக்கு வழிகோலலாம் ஆகையால் இப்பிரதேசத்தில் அணுவாயுதக் குறைப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த வேண்டும் என மொட்டறி சர்வதேச கல்லூரியின் வதிவிட ரஷ்சிய தூதுவர் றொலான்ட் றிம்மர்பாவ் தெரிவித்திருப்பதாக 'ஐலன்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி தூதுவர் கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர்மாநாடொன்றில் தெரிவித்துள்ளார் என்று அதில் மேலும் குறிப்பிட்டுள்ளது,

நவம்பர் நான்காம் திகதி முதல் எட்டாம் திகதிவரை நடைபெற்ற அணுவாயுதஉற்பத்தித் தடையை ஊக்குவிக்கும் திட்ட அமைப்பு ஏற்பாடு செய்திருந்த பயிற்சிப்பாசறை

(6ஆம் பக்கம் பார்க்க)

சங்கம் நடத்தவுள்ளது. இப் பேரணி ஜனவரிமுதல் வாரத்தில் மதுரையிலிருந்து புறப்படும் பேரணி மண்டபம் முகாம்களுக்கு எந்த உதவி அமைப்புகளும் செல்லக் கூடாது என தமிழக அரசு விதித்த தடையை மீறியே

அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கையில் ஐ நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தவறான முறையில் நடந்து கொண்டதாகவும் இந்திய - இலங்கை நட்புறவுச் சங்கம் கண்டித்துள்ளது. இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டவர்கள் பாதுகாப்பாக குடியமர்த்தப்பட்டனரா என்பதை யூ என்.எச்.சீ.ஆர் விசாரித்துப் பார்க்கவில்லை எனவும் இலங்கையில் நிலவும் நிலைமைகளை அகதிகள் திரும்பிச் செல்ல

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய கல்விப்பணிப்பாளர் நேற்று பொறுப்பேற்பு

(நமது நிருபர்)

யாழ் கல்விப் பணிப்பாளராக செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் தமது கடமையை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்றுமாலை யாழ். கல்வித் திணைக்களத்தில் பணிப்பாளரின் அலுவலகத்தில் அவரைச் சந்தித்த எமது அலுவலகச் செய்தியாளரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். வடக்குக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள க. கந்தசாமி அவர்களின் அலுவலகம் தற்காலிகமாக யாழ். கல்வித் திணைக்களத்திலேயேஇயங்கி வருவதாகவும் யாழ். வடக்கு பகுதிக்கு கல்விப்பணிமனை ஒன்று திறக்கப்படும் வரை

(6ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சை வினாத்தாள்கள் ஒரு தொகுதி இன்று வரும்

(நமது நிருபர்)

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெற இருக்கும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான முதலாம் தொகுதி வினாத்தாள்கள் இன்று யாழ். கல்வித்திணைக்களம் வந்துசேருமென யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நேற்று கொழும்பில் இருந்து பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவரினால் விமான மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட இவ் வினாத்தாள்கள் அங்கிருந்து கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு எடுத்துவரப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ள நிவாரணம்வழங்க செயலகம் நடவடிக்கை

(நமது நிருபர்)

குடாநாட்டில் கடும் மழையால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்குவெள்ள நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகச் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி நிவாரணம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளில் செயலகம் ஈடுபட்டுள்ளது இதேவேளையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# உடன் தபால்களை சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

இன்று புறப்படவுள்ள குமாரி கப்பலில் வெளியூர் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட உள்ளதால் காலை 8.00 மணிக்கு முன்னர் பிரதம தபாலகத்தில் தபால்களை சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் கேட்டுள்ளார்.

# முருங்கன் பகுதியில் விமானக்குண்டுவீச்சு

இரு பொதுமக்கள் படுகாயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்காவிமானப்படையின் குண்டுவீச்சு விமானம் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலினால் இருவர்படுகாயமடைந்ததுடன்வீடுகளும்சேதமடைந்தன.

நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானமான

(6ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் பகுதியில் பெரு வெள்ளம் குளங்கள் யாவும் நிரம்பி வழிகின்றன!

ஒருவர் பலி; நூற்றுக்கணக்கில் வீடிழப்பு

(வவுனியா)

சுமார் பத்து ஆண்டு காலத்தின் பின்னர் இம்முறை வன்னிப் பகுதியில் கடும் மழை பெய்துவருகிறது. நூற்றுக்கணக்கான குளங்கள் அணையை மீறிப் பாய்கின்றன. பல குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

வீதிகளைமூடியும், குடியிருப்புக்களை மேவியும் வெள்ளம் ஓடுகிறது. பெருமளவு மக்கள் வெள்ளத்துக்கு அஞ்சி இடம் பெயர்ந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள், ஊர்மக்கள், மாணவர்கள் ஆகியோர் அணையை மீறிவரும் வெள்ளத்தை சீர்செய்து விடுவதிலும், போக்குவரத்திற்கும், மக்கள் குடிமனைகளைப் பாதுகாப்பதற்கும் தொடர்ந்து செயற்படுகின்றனர்.

31.3 அடி நீர்மட்டத்தில் இருந்த இரணைமடுக்குளம் திறந்துவிடப்பட்டுள்ளது. கடந்ததிங்கட்கிழமை திறந்துவிடப்பட்ட இக்குளத்தில் இருந்து நேற்றுவரை ஒன்றரை அங்குலம் தண்ணீர் மட்டுமே குறைந்துள்ளது. 26 அடி வரையும் இதன் நீர்மட்டம் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் ஒலுமடு, அம்பகாமம் குளங்கள் கலிங்கு பாய்கின்றது. வவுனிக்குளம் திறந்துவிடப்பட்டு பாயும் நீரின் அளவு போதாது என்று அணைக்கட்டு திறநதுவிடப்பட்டுள்ளது. முத்தையன் கட்டு குளம் திறந்து விடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கோழிக்குஞ்சு

இரண்டரை மாத Prema Brown பேட்டுக் குஞ்சுகள் (இன்னும் ஐம்பது நாட்களில் முட்டையிடும்) நான்கு வார Prema Brown சேவல் குஞ்சுகள் உடனடி விற்பனை. உரும்பராய் சந்தி (கலையரங்கம் அருகில்) (6746)

### விற்பனைக்கு

மீன் தொட்டிகள், கண்ணாடி (கடை) சோகேஸ், கோப்பி அரைக்கும் மெஷின் மோட்டார்கள், ஆங்கில தட்டச்சுகள், மர & இரும்பு அலுமாரிகள், T. V. கட்டில்கள் விற்பனைக்குண்டு தொடர்பு: டாஸ்கொம்ப்ளெக்ஸ். 161, பிரதான வீதி, (மக்கள் வங்கி அருகாமை), யாழ்ப்பாணம் (6735)

### மகாதேவா ஜோதிடம்

1994ஆம் வருஷப்பலன் புத்தகம் எங்கும் விற்பனையாகின்றது சோதிடரை 140 செல்லர் வீதி, நல்லூரில் தினசரி சந்திக்கலாம்- (6750)

### தேவை

அநுபவம் மிக்கவர், வேலை பயிலுநர், நிர்வாகப் பகுதி /வரவேற்பு காசாளர்/ கணக்காளர், சமையல் பகுதி பரிமாறும் பகுதி, தொடர்பு கலக்ஸி நிர்வாகம், இல. 166 1-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (6742)


## "மனிதங்கள்" உதயம்

''மனிதங்கள்'' என்னும்பெயர் கொண்ட சமூக சேவை அமைப்பு புத்தூர் இளைஞர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது இதற்கான காரியாலயமும், படிப்பகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. படிப்பகத்திற்கான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் நலன்விரும்பிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது

## கலிபர் தாக்குதல்

(தொல்புரம்)

மாதகலில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது காவலரண்களிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 2-15 மணியளவில் பண்டத்தரிப்பு, விளான் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். அத்தோடு ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும்

# படையினருக்கு பொருள் வழங்க முன்வரவேண்டும்

## பொதுமக்களிடம் அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

படையினருக்கு தேவையான பொருள்களை வழங்க பொதுமக்கள் முன்வரவேண்டும் என உணவு கூட்டுறவுத்துறை ஜனசக்தி அமைச்சர் வீரசிங்க மல்லிமாராட்சி வேண்டுகோள் விடுத்துள்ளார். படையினருக்கு பொருள்களை எவ்வாறு சேகரிப்பது என்பது குறித்த மாநாடு ஒன்றை தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மல்லிமாரட்சி பேசினார்.

சிங்கள செல்வந்தர்கள், கொடைவள்ளல்கள், வர்த்தகர்கள் படையினருக்கான நிதிக்கு வாரிவழங்கவேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார். ஏற்கனவே சேகரிக்கப்பட்ட பொருள்கள் வைபவ ரீதியாக விரைவில் படைகளுக்கு வழங்கப்படும் எனவும் இதில் முதலாம் பொருள்கள் பூநகரி முகாமிற்கு டிசம்பர் 8ஆம் திகதி அனுப்பிவைக்கப்படும் எனவும் இராணுவத்தளபதி கூறினார்.

வடக்கு கிழக்கில் உள்ள படையினர் நலன்களில் அனைவரும் அக்கறை கொள்ளவேண்டும். பொருக்கு சிங்கள மக்களும் உதவவேண்டும் என்றும் இச்செய்தியாளர் மாநாட்டில் கோரப்பட்டது. அமைச்சர் வீரசிங்க மல்லிமாராட்சியுடன் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா ஆகியோரும் இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இராணுவத்திற்கான பொருள் சேகரிப்பு பணி நான்கு அமைச்சர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அமைச்சர் மல்லிமாராட்சி கூறினார்.

# கடற்தொழில்உபகரணங்கள் கடன் அடிப்படையில்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்திப் பகுதியினரால் தீவகம், காரைநகர், வலிகாமம் தென்மேற்கு, தென்மராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றியங்களைச் சேர்ந்த சங்கங்கள் தெரிவு செய்த சுமார் 25 கடல் தொழிலாளருக்கு கடந்த 23-ம் திகதி சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் வைத்து கடல் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு கடல்தொழிலாளருக்கும் சுமார் 5000/- பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதன் பெறுமதி 20 மாதங்களில் மீளப்பெறப்பட்டு சுழற்சி முறையில் புதிய பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் வெள்ளம்

## 5000 தமிழ் குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

தற்போது பெய்து வரும் பெரும்மழையினால் ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் குடும்பங்கள் மட்டக்களப்பில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. பல இடங்களில் வீடுகள் வீதிகள் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் கடும் மழை காரணமாக நாலாயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வாகரைப் பகுதியிலும் ஏனைய தாழ்ந்த இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பனிச்சங்கேணி, வட்டவாளைப் பகுதிகளிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# ஏறாவூரில் சுற்றிவளைப்பு; 15 தமிழ் வாலிபர் கைது

# பொலிகண்டி கிழக்கில் மாதிரிவீட்டுத் திட்டம்

(வடமராட்சி)

மாவீரர்நாள் நினைவையொட்டி வடமராட்சிப் பகுதியில் மாவீரர்களை நினைகூரும் வகையில் பல்வேறு வகையான சிறப்பு ஏற்பாடுகள் நடைபெற்றன

வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் பொலிகண்டி கிழக்கில் அமைக்கப்பட்டு வந்த மாதிரி வீட்டுத்திட்டம் கடந்த 24ஆம் திகதி வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் தலைமையில் புனர்வாழ்வுக் கழகத்தைச்சேர்ந்த திரு சி.ரவி திறந்துவைத்தார் 22 பேருக்கு வீடுகள் வழங்கப்பட்டன.

கடந்த25ஆம் திகதி மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு வைபவங்கள் நடைபெற்றன. பருத்தித்துறை போக்குவரத்துச் சாலைஊழியர்களான மாவீரரின் பெற்றோரை சாலை அத்தியட்சகர் திரு ஆ. கந்தையா தலைமையிலும்புலோலி ப·நோ.கூ. சங்கஊழியர்களானமாவீரர்களின் பெற்றோரை சங்கப் பணிமனையிலும் லும் வைத்து கௌரவிக்கப்பட்டனர்

மற்றும் வடமராட்சியில் பத்துக்கு மேற்பட்ட வீடுகள்ளும் வீதிகளும் திறந்து வைக்கப்பட்டன. மேஜர் கேசரியின் திருவுருவப்படம் புலோலிமேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இறுதிநாள் 27ஆம் திகதி புலோலி வர்த்தகர்சங்கம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் உள்ள மன நோயாளிகளுக்கு உடுபிடைவைகளை வழங்கினர் கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மாவீரர் வாரத்தில் தமது பகுதிக்குள் மாவீரர்களின் படங்களை மலர், தீபமிட்டு சிறப்பாக பூசித்து வந்தவர்களில் முதல் ஆறுபேரை தெரிவு செய்து பரிசில்களை வழங்கினர்.

## தடுப்பூசி தட்டுப்பாடு

தெல்லிப்பழை அரசினர் மாவட்டவைத்தியசாலையில் ஏற்பு தடுப்பூசி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இங்கு ஏற்பு தடுப்பு ஊசி பாய்ச்சுவதற்கு வரும் நோயாளர்கள் இந்த மருந்து இன்றி அவஸ்தைப்படுவதாக தெரியவருகிறது. (41)

## மழையினால் பெரும் அவதி

கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழையினால் அரியாலை சாம்சன் குடியிருப்பு, நாவற்குழி லவனிதா குடியிருப்பு ஆகியவற்றில் தங்கியுள்ள தீவக மக்கள் பெரிதும் இன்னல்அடைந்துள்ளனர். சாம்சன்குடியிருப்பில் கொட்டகைகள் ஒழுக்கின் காரணமாக ஈரமடைந்துள்ளதனால் மக்கள் சமைப்பதற்கும் படுப்பதற்கும் வெறிடங்களை நாடியதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் குடியிருப்பில் நின்ற சில தென்னை மரங்கள் கடும்காற்றினால் அடியோடு பெயர்ந்து விட்டன. இதேபோன்று நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இருபத்தைந்திற்கும் அதிகமான குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது. குடியிருப்பில் இருக்கும் ஐந்தாறு கடைகள் வெள்ளம்மூடியதால் திறக்கப்படாதிருந்ததை அவதானிக்க முடிந்தது. (22)

## "தலைநகர்" சஞ்சிகை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பின் கீழ் செயற்பட்டுவரும் தும்பளை தெற்கு மணாளன், தயான், பூபதி, வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த மக்களால் கடந்த 24 ஆம் திகதி அன்று மாலை 4-00 மணியளவில் தலைநகர் கையெழுத்து சஞ்சிகையின் இரண்டாவது இதழான மாவீரர் நாள் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது

சமூக பொருளாதார வளர்ச்சித்திட்ட வடமராட்சி அலுவலர் திரு சண் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழா நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக வடமராட்சி இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் அவர்கள் கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைத்

## உலர் உணவு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

தற்போது வழங்கப்படும் நவம்பர் மாதமுதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருள்களைஇம்மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும், சித்திரை, வைகாசி, ஆடி மாத மாணவர் மதிய உணவு


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### நடேசு நடராசமணி

அ(திபர் யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்)

மகாஜனக்கல்லூரியின் மாணவனாகவும் பின்னர் இக்கல்லூரியின் சிறந்த ஆசிரியராகவும் மகாஜனா பழைய மாணவர் சங்க உப தலைவர்களுள் ஒருவராகவும் கல்லூரி வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அமரர் நடேசு நடராசமணி அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவரை இழந்து தவிக்கும் அவர் தம் குடும்பத்தவர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகாஜனக்கல்லூரி,
தெல்லிப்பளை.
(சி-8037)

மாணவர்கள்,
ஆசிரியர்கள், அதிபர்
பழைய மாணவர் சங்கம்.


## நினைவு கூருகின்றோம்...

### 1993-12-02

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் ஜான் ஓயாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட-

❋ **ராஜி** (லோறன்ஸ் ஆரோக்கியநாதன் - மட்டு)
❋ **சீலன்** (முன்னம்போடிவெட்டை - திருமலை)
❋ **மதுரவால்** (நகுலேஸ்வரன் - திருமலை)

வவுனியா ஜோசப் முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 36 தமிழ் இளைஞர்கள். செட்டிகுளம், சேமமடுப் பகுதிகளில் சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 108 தமிழர்கள்.

சுன்னாகத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1985ஆம் ஆண்டு மணலாறு - பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் றெஜி** (சுப்பிரமணியம் மகேஸ்வரன் - காரைநகர்)

1987ஆம் ஆண்டு மட்டுநகரில் இந்தியப்படையினரால் கொலை செய்யப்பட்ட 40 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு விசுவமடு றெட்பானாப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கர்ணன்** (செல்வநாயகம் மகாதேவன் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**ஆனந் (- - -)**

சாவகச்சேரியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான.

**தம்பிப்பிள்ளை சிவம்**

ஏழாலையில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட குப்பிளான் வாசி உட்பட 02 தமிழ் இளைஞர்கள்.

1990ஆம் ஆண்டு அம்பாறை, அறுகம்குடாப்பகு

யர் கொண்ட சமூக சேவை அமைப்பு புத்தூர் இளைஞர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது இதற்கான காரியாலயமும், படிப்பகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. படிப்பகத்திற்கான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் நலன்விரும்பிகளிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது

## கலிபர் தாக்குதல்

(தொல்புரம்)

மாதகலில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது காவலரண்களிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 2-15 மணியளவில் பண்டத்தரிப்பு, விளான் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். அத்தோடு ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன-

மேலும் இதே தினம் வலிமேற்குப் பகுதிகளின் வான் பரப்பில் பரவலாக உலங்குவானூர்திகளும், குண்டு வீச்சு விமானங்களும் அடிக்கடி சுற்றி வருவதும், பேரிரைச்சலுடன் தாழப்பறந்து ரோந்து சுற்றித்திரிவதையும் காணக்கூடியதாக இருந்தது- (41)

## வீரசிங்கம் நினைவு தினம்

கூட்டுறவுத் தந்தை அமரர் வீரசிங்கம் அவர்களின் 29-வது நினைவு தினவிழா 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ், மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் நினைவுச் சொற்பொழிவுகளுடன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என மேற்படி சபையின் குறிப்பொன்று தெரிவிக்கின்றது22

## தென்னைகளுக்கு உரமிடுதல்

(யாழ்ப்பாணம்)

தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு இக் காலப்பகுதி பொருத்தமானது எனவும், வருடாவருடம்தென்னை மரங்களுக்கு உரமிடுவதன் மூலம் உற்பத்தியைக் கூட்ட முடியும் எனவும் தென்னை அபிவிருத்திச் சபையினர் அறிவித்துள்ளனர். ஐந்து வருடத்திற்கு உட்பட்ட. தென்னங்கன்றுகளுக்குதலா ஒன்றரைக் கிலோ வீதம் வை. பீ. எம் உரமும், ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட பாளை வந்த தென்னம்பிள்ளைகளுக்கு ஏ. பீ. எம் உரமும் இடலாம் எனவும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ங்கப்பட்டன.

இந்த நிகழ்வு தமிழீழ

வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் வெள்ளம் 5000 தமிழ் குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

தற்போது பெய்து வரும் பெரும்மழையினால் ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் குடும்பங்கள் மட்டக்களப்பில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. பல இடங்களில் வீடுகள் வீதிகள் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் கடும் மழை காரணமாக நாலாயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வாகரைப் பகுதியிலும் ஏனைய தாழ்ந்த இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பனிச்சங்கேணி, வட்டவாளைப் பகுதிகளிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# ஏறாவூரில் சுற்றிவளைப்பு; 15 தமிழ் வாலிபர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் சுற்றி வளைக்கப்பட்டு பதினைந்து தமிழ்வாலிபர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏறாவூர் 4ஆம், 5ஆம்வட்டாரங்களில் கடந்தபுதன்கிழமை தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

சுமார் 250பேர் கொண்ட பொலிஸ் கோஷ்டியே இத் தேடுதலில் ஈடுபட்டது.

ஆண்களும், பெண்களும் ஏறாவூர் பொதுச் சந்தை முன்றலுக்கு அழைத்து வரப்பட்டு முகமூடி அணிந்த மூவரினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பதினைந்து தமிழ் இளைஞர்களும் விசாரணைக்காக ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச் செல்லப்பட்டனர்.

## தேக்கம் நாற்று விநியோகம்

வனத் திணைக்களத்திலிருந்து யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் பெற்றுக் கொண்ட தேக்கம் நாற்று முளைகள் தற்போதுவிநியோகிப்பதற்காக யாழ்ப்பாண வனத் திணைக்களத்தில்வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பெற்று நட்டுப் பராமரிக்க விரும்பும், அரச திணைக்களங்கள் பாடசாலைகள், கோவில்கள், பொது நிறுவனங்கள், தனியார் ஆகியோர் அதற்கான விண்ணப்பங்களை யாழ் வனத்திணைக்களத்தில் டிசம்பர் பத்தாம் திகதிக்கு முன்பாக கையளிக்க வேண்டுமென மாவட்டபிரதி ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கொலரா தடுப்பு முயற்சிகள் வடமராட்சியில் தீவிரம்

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, கரவெட்டி, நாகர் கோவில் பகுதிகளில் கொலரா நோய் பரவும்அபாயம் ஏற்பட்டுள்ளதையடுத்து இப் பகுதிகளில் கொலரா தடுப்பு நடவடிக்கைகளைப் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மிகத் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இப்பகுதிகளில் கொலராவினால் பீடிக்கப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட நோயாளிகளின் குடும்பங்களுக்கு தடுப்புமருந்துகள் வழங்கல், கிணறுகளுக்குப் குளோரின் இடுதல் மக்களுக்குச் சுகாதாரக் கருத்தரங்குகளை நடாத்தல் ஆகியன இடம்பெறுகின்றன. அண்மையில் பருத்தித்துறை கரவெட்டி நாகர் கோவில் பகுதிகளில் வயிற்றோட்டநோயினால் பீடிக்கப்பட்ட மூன்று நோயாளிகள் மரணமடைந்துள்ளனர். இன்னும் சிலர் நோயினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவதாகவும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (25)

## 53வருடப்பிளவின்பின் கூட்டு

53 ஆண்டு கால பிளவின் பின்னர் லங்கா சமசமாஜக் கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டுச் சேர்ந்துள்ளன. இதற்கான அரசியல் உடன்பாடு நேற்று மாலை கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் கைச்சாத்தானது. இரு கட்சிகளினதும் பொதுச் செயலர்கள் இவ்வுடன் பாட்டில் கைச்சாத்திட்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பின் கீழ் செயற்பட்டுவரும் தும்பளை தெற்கு மணாளன், தயான், பூபதி, வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த மக்களால் கடந்த 24 ஆம் திகதி அன்று மாலை 4-00 மணியளவில் தலைநகர் கையெழுத்து சஞ்சிகையின் இரண்டாவது இதழான மாவீரர் நாள் சிறப்பிதழ் வெளியிடப் பட்டது

சமூக பொருளாதார வளர்ச்சித்திட்ட வடமராட்சி அலுவலர் திரு. சண் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழா நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக வடமராட்சி இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் அவர்கள் கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

87 பக்கங்களைக் கொண்ட இக் கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியர் தம்பலகாமம் திரு. மா. புவேந்திரராசா ஆவார்.

இச் சஞ்சிகையில் மாவீரர் வணக்கம், மாவீரர்வரலாறு, போராட்டக் கருத்துக்களைக் சித்திரிக்கும் சிறுகதைகள், கவிதைகள், திருமலை மாவட்டத்தின் சில விபரங்கள், மாணவர் பக்கம் போன்ற பல அம்சங்கள் அடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது .

றினால் அடியோடு பெயர்ந்துவிட்டன. இதே போன்று நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இருபத்தைந்திற்கும் அதிகமான குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது. குடியிருப்பில் இருக்கும் ஐந்தாறு கடைகள் வெள்ளம்மூடியதால் திறக்கப்படாதிருந்ததை அவதானிக்க முடிந்தது. (22)

## உலர் உணவு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

தற்போது வழங்கப்படும் நவம்பர் மாதமுதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருள்களைஇம்மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும், சித்திரை, வைகாசி, ஆடி மாத மாணவர் மதிய உணவு முத்திரைக்கான பொருள்களை இம்மாதம் 03 ம் திகதிக்கும் 15-ம் திகதிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளுமாறும் இக்குறிப்பிட்ட திகதிகளிற்குள் பொருட்களைப் பெறாதவர்களுக்கு பின்னர் பொருள்கள் வழங்கப்படமாட்டாது எனவும் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பதில் பொது முகாமையாளர் செல்வி செல்வவதனா பாவனையாளர்களுக்கு அறிவித்துள்ளார். (22)


யா| சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம்

**1994 கல்வி ஆண்டுக்கான அனுமதி**

ஆண்டு 6; ஆண்டு 12 - விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை

மேற்படி ஆண்டுகளுக்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டு - 6 விண்ணப்ப முடிவுத் திகதி 20-12-1993

ஆண்டு - 12 விண்ணப்ப முடிவுத் திகதி 31-12-1993

ஆண்டு - 6 க்கான அனுமதி - கல்வித் திணைக்களப் பொதுப் பரீட்சைப் பெறுபேறு மூலமும்

ஆண்டு-12 க்கான அனுமதி - தமிழீழ பொதுக் கல்வித் தேர்வுப் பெறுபேறுமூலமும் வழங்கப்படும்

அதிபர்

70|20, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (6748)


1985ஆம் ஆண்டு மணலாறு - பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் றெஜி** (சுப்பிரமணியம் மகேஸ்வரன் - காரைநகர்)

1987ஆம் ஆண்டு மட்டுநகரில் இந்தியப்படையினரால் கொலை செய்யப்பட்ட 40 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு விசுவமடு றெட்பானாப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கர்ணன்** (செல்வநாயகம் மகாதேவன் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**ஆனந் (- - -)**

சாவகச்சேரியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான.

**தம்பிப்பிள்ளை சிவம்**

ஏழாலையில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட குப்பிளான் வாசி உட்பட 02 தமிழ் இளைஞர்கள்.

1990ஆம் ஆண்டு அம்பாறை, அறுகம்குடாப்பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**ராஜன்** (— — சேனைக்குடியிருப்பு - கல்முனை- அம்பாறை)

1991ஆம் ஆண்டு திருமலைப்பகுதியில் பல கிராமங்களை இராணுவத்தினர் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கொல்லப்பட்ட 03தமிழர்கள் மற்றும் உயிருடன் எரிக்கப்பட்ட பல தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு 24.11.92 அன்று பலாலியில் ஏற்பட்ட சமரின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். குலமகள்-ஜமீலா** (மாலா முருகையா - அளவெட்டி வடக்கு - யாழ்)

வவுனியா - மன்னார் எல்லைப்பகுதிகளில் அமைந்திருந்த வண்ணாங்குளம், கந்துருவெல, வீரவெல சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**லெப். குரு** (பூபாலப்பிள்ளை ரவி - அக்கரைப்பற்று - அம்பாறை)

**லெப். அரவிந்தன்** (ராஜரட்ணம் சந்திரமோகன் - பெரியபுல்லுமலை - மட்டு)

**ஜீவகுமார்** (சங்கரப்பிள்ளை கிரிதரன் - பெரியதம்பனை - வவுனியா)

**லெப் குணசீலன்-அனஸ்ரீன்** (சண்முகரத்தினம் சதீஸ்வரன் - செம்மண்தீவு - மன்னார்)

**லெப். சர்மா** (முத்தையா வீரதுரைசாமி - விநாயகபுரம் - முழங்காவில்)

**2-ம் லெப். சரோஜன்** (சிதம்பரநாதன் சிவனேசன் - மட்டுவில் நாடு மேற்கு - பூநகரி)

**கப்டன்நிமலன்-நிர்மலன்** (அந்தோனிப்பிள்ளை அருள்மரியராசா, மணல் ஒழுங்கை, பருத்தித்துறை - யாழ்)

**லெப். செல்வன்** (பாக்கியநாதன் செல்வநாதன் ஆஸ்பத்திரி வீதி - யாழ்)

**லெப். ஜெயா** (சண்முகராசா சிவகுமார் (தயா)- வேலணை)

**2-ம் லெப். மதியழகன்** (சுப்பிரமணியம் கஜேந்திரன் - உடுவில் வீதி, மானிப்பாய் - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8032)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கடற்புலி கப்டன் நிமலன்

(அந்தோனிப்பிள்ளை அருள்மரியராசா)

மயிலிட்டி (யோகா)

தமிழ் மண்ணில் 21-04-1971 | தமிழர் மனங்களில் 02-12-1992

02-12-1992-ல் வவுனியா - மன்னார் எல்லைப் புறத்தில் முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந் தார் இவருடன் வீரச்சாவடைந்த வீரவேங்கை களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்

நிலையான உறுதி கொண்டு
தளராத தாகம் சுமந்து
தலைவனின் இலட்சிய கொள்கை ஏற்று
தமிழீழம் காண வேண்டுமென்று
பிஞ்சு வயதிலே போர்க்களம் புகுந்து
நிமலன் என்னும் பேரும் கொண்டு
தமிழர் படையணியில் கப்டன் நிமலனாகி நீ
காட்டிய வீரம் எத்தனை! எத்தனை!
வழிமேல் விழிவைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
உன் இலட்சியம் நிறைவேறமுன்
வன்னி மண்ணில் வீரசொர்க்கம் அடைந்தாயே
ஆண்டொன்று சென்றாலும் உன்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகல மாட்டாது

# ஈராக்மீது பொருளாதாரத் தடை தொடர்ந்து நீடிக்க வேண்டும்

## --பில் கிளிண்டன்

(வாசிங்டன்)

ஈராக்கிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை விதித்திருக்கும் பொருளாதாரத் தடை நடவடிக்கை தொடர்ந்தும் நீடித்திருப்பது மிகவும் முக்கியமானது ஆகும் என்று அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஈராக் தனது ஆயுத உற்பத்தி ஆற்றலை முழுமையாகக் கைவிடும் அளவுக்கு இத்தடை நீடிக்க வேண்டும். ஆயுத உற்பத்தி திட்டங்கள் பற்றிய பரிசோதனைகளுக்கு ஈராக்ஒப்பு கொண்டுள்ள போதும், ஈராக்கிய அதிபர் சதாம் உசைன் ஆயுதங்களின் உற்பத்தியிலேயே அதிகம் நாட்டம் கொண்டுள்ளார் என்று நம்புளதாகவும் குறிப்பிட்டார்.

## 1-ம்ஆண்டுநினைவஞ்சலி



தாயின் மடியில்
28-8-1973

மணலாற்று மண்ணில்
12 12-1992

### 2-ம் லெப். கலைவாணி

செல்வராஜா மதிவதனி மீசாலை

திதி: 2 12.1993

கொலுவிருத்தி மலர்தூவி விளக்கேற்றி
மாலையிட்டு கொள்கின்றோம் அஞ்சலிகள்
ஈழமெனும் திருநாட்டை மீட்பதற்காய்
இனனுயிரை ஈந்தீரே மணலாற்றில்
சாவினிலும் சரித்திரம்தான் படைத்தீரே
தமிழீழ எல்லைதனில் எதிரியுடன் போரிட்டு
ஈழநன் நாட்டின் விடியலைத் தேடி பறந்திட்ட
வெண்புறாவுக்கு எமது அஞ்சலிகள்

12-12-92 அன்று இவருடன் மரணித்த சக மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

2-12-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும்கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், சக போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்

நினைவுடன்
குடும்பத்தினர்.

மயூரன் வீதி,
(கேணியடி வீதி.)
மீசாலை மேற்கு

(6727)

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்



### பிரிட்டனிடம் ஒப்படைப்பு

(பீங்கிங்)

ஹொங்கொங்கின்அரசியல் எதிர்காலம் தொடர்பாக உடன்பாடு காண்பதில் பிரிட்டன் மனப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என சீனா தெரிவித்துள்ளது. இந்த பிரச்சினையில் இரு நாடுகளிடையிலான சர்ச்சையில் அடுத்த நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை சீனா பிரிட்டனிடம் ஒப்படைத்துள்ளது

### அதிகளவில் அணு பரிசோதனை

(நியூயோர்க்)

முன்னர் அளித்த அனுமதியை விட அதிகளவில் அணு ஆயுத பரிசோதனைகளை அமெரிக்கா நடத்தியிருப்பதாக "'நியூஸ்வீக்' செய்தி கூறுகிறது. அறிவிக்கப்படாத பரிசோதனைகளின் எண்ணிக்கை விபரம் வெளியிடப்படவில்லை.

### மதன்லால் குரானா முதல்வராகிறார்

புதுடில்லி யூனியன் பிரதேசத்தின் முதலவராக பாரதீய ஜனதாகக் கட்சியை சேர்ந்த மதன்லால் குரானா இன்று வியாழக்கிழமை பொறுப் பேற்கவுள்ளார்..

### பொருளாதாரத்தடை நேற்று முதல் அமுல்

லிபியாவிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடைகள் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது அமெரிக்க பான்எம் விமானம் லொக்கர் பீக்கு மேலே குண்டு வைத்து தகர்க்கப்பட்டவை தொடர்பாக இரு லிபிய நாட்டவர்களை ஒப்ப...

# பாகிஸ்தானுக்கு உதவிகள் மீண்டும் வழங்கப்படாது

## - வாசிங்டன் அறிவிப்பு

(வாசிங்டன்)

பாகிஸ்தானுக்கான இராணுவபொருளாதார உதவிகள் தொடர்ந்துவழங்குவதற்கான வாய்ப்புஇல்லை என்றுகிளிண்டன் நிர்வாகம் கூறியுள்ளது கடந்த திங்கள் செய்தியாளர்களின்கேள்வியொன்றுக்கு எழுத்து மூலமாக அமெரிக்க வெளியுறவுத்துறை அளித்துள்ளபதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது தென்னாசியாவில் அணு ஆயுதப் பரவல் தடுப்பு தொடர்பாக கிளிண்டன் நிர்வாகத்தின். விருப்பத்தில் எத்தத் தளர்வும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் அணுஆயுத தயாரிப்புத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 1990 அக்டோபர் மாதம் முதல் பிரஸ்லர் திருத்தச் சட்டத்திற்கு அமைவாக இராணுவ பொருளாதார உதவிகளுக்கு தடை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

# உத்தரப் பிரதேச வாக்காளர் முனைப்பான முன்முயற்சி

## வி.என். காட்கில் வர்ணிப்பு

(டில்லி)

வகுப்புவாத சக்திகளை தடுத்து நிறுத்தும் வகையில் உத்தரப் பிரதேசத்து வாக்காளர் முனைப்பான முயற்சி எடுத்திருப்பதாக காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர்வி.என். காட்கில் கூறியுள்ளார். புதுடில்லியில் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்

மத்திய பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின் வாக்குகள் எண்ணும் வேலைகள்நேற்று முன்தினம் ஆரம்பமாகிற்று.

# சட்டமன்றத் தலைவராக முலாயம் சிங் யாதவ் தெரிவு

உத்தரப் பிரதேசத்தில் முன்னாள் முதல்வர் முலாயம் சிங்யாதவ், பகுஜன் சமாஜ் கட்சி, மற்றும் சமாஜவாரி ஜனதாக் கட்சி உறுப்பினர்களின் சட்டமன்றத் தலைவராக ஒரு மனதாகத் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளார். புதிதாக தெரிவு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் லக்னோவில் நடைபெற்ற போது இத் தெரிவு இடம்பெற்றதாக பகுஜன் சமாஜ்கட்சியின் தலைவர் கான்சிராம் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதேவேளை முலாயம் சிங் யாதவ் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவைக் கோரினால் நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக இந்திரா காங்கிரஸ் கட்சியும், ஜனதா தளும் தெரிவித்துள்ளன.

# மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் முன்னணியில்

(டில்லி)

மத்தியப் பிரதேச மாநிலத்தில் இதுவரை அறிவிக்கப்பட்ட பல முடிவுகளில் காங்கிரஸ் கட்சி முன்னணியில் இருந்து வருகிறது அறிவிக்கப்பட்ட 130 இடங்களில் காங்கிரஸ் கட்சிக்கு 75 இடங்களும், பாரதீய ஜனதாவிற்கு 46 இடங்களும் ஜனதாதள் 2 இடங்களும் சிபிஐக்கு 1இடமும் பகுஜன்சமஜ் கட்சிக்கு 2 இடங்களும் சுயட்சை மற்றும் இதர கட்சிகளுக்கு 4 இடங்களும் கிடை...

...போக்கை வைத்து பார்த்தால் காங்கிரஸ் 95 இடங்களிலும் பாரதீயஜனதா 67 இடங்களிலும் முன்னணியில் இருக்கின்றன. ஜனதாதள் 2 இடங்களிலும் பகுஜன் சமஜ் 9 இடங்களிலும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி 1 இடத்திலும் முன்னணியில் இருக்கின்றன சுயேட்சைகளும் ஏனையோரும் 7 இடங்களில்முன்னணியில் உள்ளனர் மத்திய பிரதேசத்திலுள்ள மொத்தம் 320 இடங்களில் 316 இடங்களுக்கு மட்டுமே...

தமிழ் மண்ணில் 21-04-1971

தமிழர் மனங்களில் 02-12-1992

02-12-1992-ல் வவுனியா - மன்னார் எல்லைப் புறத்தில் முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தார் இவருடன் வீரச்சாவடைந்த வீரவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்

நிலையான உறுதி கொண்டு
தளராத தாகம் சுமந்து
தலைவனின் இலட்சிய கொள்கை ஏற்று
தமிழீழம் காண வேண்டுமென்று
பிஞ்சு வயதிலே போர்க்களம் புகுந்து
நியலன் என்னும் பெரும் கொண்டு
தமிழர் படையணியில் கப்டன் நிமலனாகி நீ
காட்டிய வீரம் எத்தனை! எத்தனை!
வழிமேல் விழிவைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
உன் இலட்சியம் நிறைவேறமுன்
வன்னி மண்ணில் வீரசொர்க்கம் அடைந்தாயே
ஆண்டொன்று சென்றாலும் உன்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகல மாட்டாது

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

02-12-1993 இன்று எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் நினைவு அஞ்சலியிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு சகபோராளிகளையும் அழைக்கின்றோம்.

தற்போதைய வசிப்பிடம்,
மணல் ஒழுங்கை,
பருத்தித்துறை.

உன் பிரிவால் வாடும்
- குடும்பத்தினர்

(6695)

---

2-12-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும்கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், சக போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்

மயூரன் வீதி,
(கேணியடி வீதி.)
மீசாலை மேற்கு

நினைவுடன்
குடும்பத்தினர்.

(6727)

---

# ஓராண்டு நீங்காத நினைவலைகள்



## திருமதி நித்தியானந்த மங்களம்
(பேபி அக்கா)
## துரைரத்தினம் (சாண்டோ)

தோற்றம்: 04-10-1940  தூக்கம்: 12-12-1992

கல்லறையே நீ கதவை மூடாதே
நெஞ்சத்து நினைவலையில் அத்தனையும் பசுமத்ளிர்கள்
ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
வேரென நீ இருந்தாய் அதில் நாம் விழுந்துவிடாது
இருந்தோம்
அன்பான மனைவியாய் பாசமுள்ள தாயாய்
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் நீ இருந்தாய்
அந்த ஒளியில் நீ மீண்டும் வருவாய் என
காத்திருக்கின்றோம்
நாட்கள் நகருகின்றன உனக்காக காத்திருக்கின்றோம்
மாதங்கள் வந்து போகின்றன உனக்காக
காத்திருக்கின்றோம்
வருடம் ஒன்று வந்து போகின்றது உனக்காக
காத்திருக்கின்றோம்
ஏய்......
செல்லக்கிளியே மெல்லப் பேசு
தென்றல் காற்றே மெல்ல வீசு
தூங்கும் எங்கள் கண்மணி பேபி தூங்கட்டுமே
அவள் தூக்கம் கலையாது இருக்கட்டுமே
கல்லறையே நீ கதவை மூடாதே.

சவனாய்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (6724)

கண்மணி வரவை
எதிர்பார்த்து காத்திருக்கும்
கணவன், பிள்ளைகள்

---

# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு
16-8 1907

உதிர்வு
13-12-1992

திதி: 2-12-1993

அமரர்
## அம்பலவாணர் செல்லப்பா செல்லத்துரை
(வர்த்தகர்)

அன்பையும் அறிவையும் ஊட்டி வளர்த்து
பண்பையும் பாசத்தையும் காட்டி நல்ல
வழியில் வாழ எம்மை ஆளாக்கிய தெய்வமே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
எம் துயர் ஆறவில்லை

அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

-குடும்பத்தினர்

(6747)

---

வில்லை.

## மதன்லால் குரானா முதல்வராகிறார்

புதுடில்லி யூனியன் பிரதேசத்தின் முதலவராக பாரதீய ஜனதாகக் கட்சியை சேர்ந்த மதன்லால் குரானா இன்று வியாழக்கிழமை பொறுப் பேற்கவுள்ளார்.

## பொருளாதாரத்தடை நேற்று முதல் அமுல்

லிபியாவிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடைகள் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது அமெரிக்க பான்எம் விமானம் லொக்கர் பீக்கு மேலே குண்டு வைத்து தகர்க்கப்பட்டவை தொடர்பாக இரு லிபிய நாட்டவர்களை ஒப்படைக்க கோரி அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் லிபியாவை நிர்ப்பந்தித்து வருவது தெரிந்ததே

## பதவியேற்றார்

சென்னையில் இந்தியக் கடற்படையின் பொறுப்பு அதிகாரியாக கமடோர் ரவீந்திரநாத் நேற்று முன்தினம் பதவியேற்றார். இதற்கு முன்பாக இப் பதவியை வகித்த கமடோர் எச். சானிக் முப்பத்தைந்து ஆண்டுக்கால சேவைக்கு பின்னர் நேற்று முன்தினம் ஓய்வு பெற்றதை தொடர்ந்தே இவருக்கு இந்த நியமனம்வழங்கப்பட்டுள்ளது

## இஸ்ரேல் இராணுவம் இணக்கம்

பாலஸ்தீனிய தீவிரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இஸ்ரேல் முன்வந்துள்ளது அத்துடன் காஸா பள்ளத்தாக்கில் வன்செயல்களை நிறுத்துவதற்கும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது. காஸாப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் இஸ்ரேலிய இராணுவத் தளபதிகளும், பாலஸ்தீனிய தலைவர்களும் சமாதானம் ஏற்படுவதற்காக உழைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை பாலத்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இஸ்ரேலிய அரசினால் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதும், அப்போது இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 60 பாலஸ்தீனியர்கள் காயமடைந்ததும் ஒருவர் கொலையுண்டதும் தெரிந்ததே.

---

பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் லக்னோவில் நடைபெற்ற போது இத் தாக இந்திரா காங்கிரஸ் கட்சியும், ஜனதா தளமும் தெரிவித்துள்ளன.

## மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் முன்னணியில்

(டில்லி)

மத்தியப் பிரதேச மாநிலத்தில் இதுவரை அறிவிக்கப்பட்ட பல முடிவுகளில் காங்கிரஸ் கட்சி முன்னணியில் இருந்து வருகிறது அறிவிக்கப்பட்ட 130 இடங்களில் காங்கிரஸ் கட்சிக்கு 75 இடங்களும், பாரதீய ஜனதாவிற்கு 46 இடங்களும் ஜனதா தள் 2 இடங்களும் சிபிஐக்கு 1இடமும் பகுஜன்சமஜ் கட்சிக்கு 2 இடங்களும் சுயேட்சை மற்றும் இதர கட்சிகளுக்கு 4 இடங்களும் கிடைத்துள்ளன. 181 தொகுதிகளில் தேர்தல முடிவுகளின் போக்கை வைத்து பார்த்தால் காங்கிரஸ் 95 இடங்களிலும் பாரதீயஜனதா 67 இடங்களிலும் முன்னணியில் இருக்கின்றன. ஜனதாதள் 2 இடங்களிலும் பகுஜன் சமஜ் 9 இடங்களிலும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி 1 இடத்திலும் முன்னணியில் இருக்கின்றன சுயேட்சைகளும் ஏனையோரும் 7 இடங்களில்முன்னணியில் உள்ளனர் மத்திய பிரதேசத்திலுள்ள மொத்தம் 320 இடங்களில் 316 இடங்களுக்கு மட்டுமே தேர்தல் நடத்தப்பட்டுள்ளது

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
26-06-1971

வீரச்சாவு
02-12-1992

## 2ஆம் லெப். குலமகள்
(செல்வி மாலா முருகையா)
(அளவெட்டி)

தமிழ்க்குலமகளே வீரக்கோவை மா மகளே (மாலா)
வனப்புமிகு வளலாய் மண்ணில் - உன்
குருதி உறைந்தாலும் எம்மன
உறுதி குலைந்திடாது

கோடி படை வந்தாலும்
கொடுங்கோலன் கரம் நீண்டாலும்
கொடும்பசி தான் எமை வதைத்தாலும்
குறையாது எம் சுதந்திர தாகம்

உன் குறியும் தவறாது எம் குறையும் தீர்ந்து விடும்
தீபச் சுடரொளியாய் துயிலும் மா வீர மாதே
புவிபரவு புகழ் என்றுமுனைத் தொடருமம்மா
'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்றே நீ
உறங்கு

2-12-93 இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி, மதியபோசனத்தில் சக போராளிகள், உற்றார், உறவினர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

வில்லியம் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(6740)

## 30 பரிசாரகர்களுக்கு பயிற்சி வழங்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் சுமார் 30 பரிசாரகர்களுக்கு பயிற்சிநடைபெறவுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். அண்மையில் மேற்படி பரிசாரகர்களை சேர்த்துக் கொள்வதற்கென நடாத்தப்பட்ட பரீட்சைக்கு தோற்றிய 40 பேரில் சித்தியெய்திய 30 பேரிற்கே மேற்படி பயிற்சி நடைபெறவுள்ளது.

இவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையிலேயே மூன்று மாத கால பயிற்சி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் பயிற்சியை வழங்குவதற்கு அனுமதிக்கும்படி கோரி கடிதம் ஒன்றை யாழ், வைத்திய சாலைப் பணிப்பாளர் மகளிர் விவகார போதனா வைத்தியசாலைகள் அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார் இதற்கான அனுமதிகள் கிடைத்தவுடன் பயிற்சிகள் ஆரம்பமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## வடக்கு- கிழக்கு இணைப்பிற்கு தமிழ் எம்.பியின் புதிய யோசனை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கை இணைக்க சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள் என்று பயந்தால் மேல் மாகாணத்தை தனியாக இயங்கவிட்டு ஏனைய ஆறு மாகாணங்களையும் இரண்டு இரண்டாக இணைத்து மூன்று மாகாண சபையை அமையுங்கள் என கே. நவரத்தினம் எம். பி. பாராளுமன்றத்தில் ஆலோசனை தெரிவித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் அமைதியை ஏற்படுத்த யாரும் எதிர்ப்பாக இல்லை. ஆனால் அமைதிக்கான திட்டம்தான் இல்லை.

சிறிய நாடான இலங்கையில் பெரிய நாடாக வடக்கு -கிழக்கு உள்ளது. இவற்றை இணைக்க சிங்கள மக்கள் எதிர்ப்பதாகஇல்லை. ஆனால் நீங்கள் அப்படி நினைத்துப் பயப்படுகிறீர்கள்

சிங்கள மக்களை சமாளிக்கவே முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா வடக்கு - கிழக்குக்கு மாத்திரமல்ல வேறு மாகாணங்களுக்கும் மாகாணசபையை வழங்கினார் என்று அவர் அங்கு தெரிவித்தார்.

மேல் மாகாணம் பெரியது என்பதனால் தமது யோசனையின்படி அதனைதனியாக இயங்கவைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்

## விண்ணப்ப முடிவு மேலும் நீடிப்பு

யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ளவதிவிடவேளாண்மைப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 10-12 93 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்ளது.

இந்தப் போட்டியிலே கூடுதலான போட்டியாளர்களை ஈடுபடுத்தும்நோக்குடனேயே விண்ணப்ப முடிவு திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பல்வகைப் பொருட்கள் மலிவு விலையில்!

ரூபா 500|- க்கு மேற்பட்ட கொள்வனவிற்கு பரிசு சிட்டைகள்

புதுமை வழியில் அன்பளிப்பு வழங்க அன்பளிப்பு மடல்கள்

சகலவகை பொருட்களையும் ஒரேஇடத்தில் பெற்றுக்கொள்ள

எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: நவம்பர் மாதத்திற்கான சீட்டிழுப்பு இன்று 02-12-93 காலை 11 மணியளவில் இடம்பெறும். (சி-8036)


## பல்கலைக்கழக பட்டங்கள் சமமதிப்புடையவை

### சுற்றறிக்கை மூலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம் உட்பட பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்ட பல்கலைக் கழகங்களினால் வழங்கப்படும் ஒரே மட்டத்திலான பட்டங்கள் யாவும் சமமதிப்புள்ளவையாக கணிக்கப்படவுள்ளதாக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வகையில் கற்கும் மாணவர்கள் பட்டங்களை அவர்கள் உள்வாரியாகவோ, வெளிவாரியாகவோ பெற்றிருப்பினும் அவை சமமதிப்புள்ளவையாக கணிக்கப்பட வேண்டும்.

இவ் அறிவித்தல் பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் சகல பல்கலைக் கழகங்கள் இணைந்த பல்கலைக் கழக கல்லூரிகள், திறந்த பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## கொழும்பின் சுத்திகரிப்பு தனியாரிடம் ஒப்படைப்பு?

(கொழும்பு)

கொழும்பின் கோட்டை மற்றும் புறக்கோட்டை பகுதிகளில் குப்பை கூழங்களை அகற்றும் வேலைகள் தனியாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இத்தகவலை கொழும்பு மாநகர ஆணையாளர் மாரசிங்க பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; நாளொன்றிற்கு சுமார் அறுநூறு தொன் குப்பையை அகற்றவேண்டி இருப்பதாகவும், பரீட்சார்த்த அடிப்படையில் இத் திட்டம் தனியாரிடம் விடப்பட இருப்பதாகவும் குழு நிலைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள இத் திட்டம் வெற்றி பெற்றால் நகரம் முழுவதுக்கும் விரிவாக்கப்படும் எனவும் தெரிவித்தார்

அத்துடன் பேரையாறு சுத்தப்படுத்தும் வேலையில் உலகவங்கியின் உதவியுடன் துறைமுக அபிவிருத்தி சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை என்பவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.


நன்றி கூறுகின்றோம்

கடந்த 11-11-93 அன்று சாவகச்சேரி சந்தை மைதானத்தில் விமானக்குண்டு வீச்சினால் சேதமடைந்த வர்த்தக ஸ்தாபனங்களுக்கு உரிய முறையில் பாதுகாப்புவழங்கியமைக்கு சாவகச்சேரி தமிழீழ காவல் துறையினர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

கைத்தொழில் வர்த்தக சங்கம்
சாவகச்சேரி

(5076)


## இடம்பெயர்ந்தோர் முகாம் வெள்ளத்தில் மூழ்கின

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையினால் நவாலி, மானிப்பாய் பகுதிகளில் பல வீதிகள், வீடுகள், இடம்பெயர்ந்தோர் முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அராலியிலிருந்து இடம்பெயர்ந்த 86குடும்பங்களவசித்துவந்த நவாலிஅரசடிஇடம்பெயர்ந்தோர் முகாம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தற்போது இக்குடும்பங்கள் முகாமிற்கு அண்மையிலுள்ள வீடுகளிலும், பாடசாலைகளிலும் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

மானிப்பாய், நவாலிப் பகுதிகளிலுள்ள பல வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இங்குள்ள பல வீதிகளில் பெருமளவு வெள்ளம் தேங்கிநிற்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. (14)


மாபெரும் மௌனப் பேரணி

குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தின் மீதான விமானத் தாக்குதலையும் இதர வழிபாட்டுத் தலங்கள், மருத்துவ மனைகள், அரச செயலகம், பாடசாலைகள், பொதுமக்கள் வாழ்விடங்கள் மீதான குண்டுவீச்சுத் தாக்குதல்களையும் கண்டித்து நடாத்தப்படும்

மாபெரும் மௌனப் பேரணி

காலம்: வெள்ளி 03-12-93 காலை 9.00 மணி

ஆரம்பமாகுமிடம்: குருநகர் புனித யாகப்பர் தேவாலயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

- அமைப்புக்குழு

பிரசுர அன்பளிப்பு:
குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி (சி-8035)

நியாய விலையில் நீங்கள் பொருட்களை வாங்க இன்னுமோர் வாணிபம்!

சிறந்த பொருட்களை நிறைந்த மனதுடன் பெற்றுக்கொள்ள

மைதானத்தில் விமானக்குண்டு வீச்சினால் சேதம டைந்த வர்த்தக ஸ்தாபனங்களுக்கு உரிய முறையில் பாதுகாப்புவழங்கியமைக்கு சாவகச்சேரி தமிழீழ காவல் துறையினர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

கைத்தொழில் வர்த்தக சங்கம்
சாவகச்சேரி

(5076)

நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையினால் நவாலி, மானிப்பாய் பகுதிகளில் பல வீதிகள், வீடுகள், இடம்பெயர்ந்தோர் முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அராலியிலிருந்து இடம்பெயர்ந்த 86குடும்பங்களவசித்துவந்த நவாலிஅரசடிஇடம்பெயர்ந்தோர் முகாம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தற்மிற்கு அண்மையிலுள்ள வீடுகளிலும், பாடசாலைகளிலும் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

மானிப்பாய், நவாலிப் பகுதிகளிலுள்ள பல வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இங்குள்ள பல வீதிகளில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

(14)

காலம்: வெள்ளி 03-12-93 காலை 9.00 மணி
ஆரம்பமாகுமிடம்: குருநகர் புனித யாகப்பர் தேவாலயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

- அமைப்புக்குழு

பிரசுர அன்பளிப்பு:
குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி (சி-8035)

நியாய விலையில் நீங்கள் பொருட்களை வாங்க இன்னுமோர் வாணிபம்!

## சிறந்த பொருட்களை நிறைந்த மனதுடன் பெற்றுக்கொள்ள

## சேரன் பல்பொருள் வாணிபம்

தேவையான பொருட்களை தேடியலையவேண்டிய அவசியமின்றி சுன்னாகத்திலும் 01. 12. 1993 தொடக்கம் சிறந்து விளங்குகின்றது.

## சேரன் பல்பொருள் வாணிபம்!

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய ஒருமுறை நாடுங்கள்!

# சேரன் பல்பொருள் வாணிபம்

காங்கேசன்துறை வீதி - சுன்னாகம்.

வாணிபம் வளர வாழ்த்துபவர்கள்:

எழினி புடவை வாணிபம்
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சேரன் பல்பொருள்வாணிபம்
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

விக்ரர் இயந்திர உதிரிப்பாக விற்பனை நிலையம்
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

சேரன் விவசாய இரசாயன பொருள் வாணிபம்
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

சேரன் பல்பொருள்வாணிபம்
பிரதான வீதி, நெல்லியடி.

சேரன் பல்பொருள்வாணிபம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-8033)

### சிந்தனைக்கு

நம்பிக்கை ஒளியின் பாதையில், பின் தொடர்ந்து வருவது ஏமாற்றம்.

யெட்டிஷியா லேண்டல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 02-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# சுதந்திரக் கட்சியின் புதிய கோஷம்

"இனப்பிரச்சினையைத் தீருங்கள் அல்லது இராஜினாமாச் செய்யுங்கள்'' என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு நிறைவேற்றியுள்ளமையும், இக்கோரிக்கையை முன்வைத்து பொதுக் கூட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளமையும், சிங்களக் கட்சிகளைப் பொறுத்துப் பெயரளவில் தானும் ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கை என்றே கூறலாம்

இனப்பிரச்சினைக்கான தீர்வாக இராணுவத் தீர்வையே அண்மைக்காலம் வரை சுதந்திரக் கட்சியும் வற்புறுத்தி வந்தது. ஆனால், தற்பொழுது வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்து வருகையில், வடக்கு - கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினையே அதற்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என சுதந்திரக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடக்கூடிய ஒன்றே

இந்தவகையில் சுதந்திரக்கட்சியின் தீர்மானமானது சிங்களவரின் அரசியலில் புதியதொரு பரிணாமமாயினும், இனப்பிரச்சினை தீர்வு என்பதற்கு பெரும் தொலைவு வரை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட சிங்கள அரசியல் கட்சிகள் முன்னேற வேண்டும் என்பதே யதார்த்த நிலையாகும். ஆனால் இது அக்கட்சிகளால் முடியுமா என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில், சுதந்திரக்கட்சியும் சரி, ஏனைய சிங்களக்கட்சிகள் எதுவாக இருப்பினும் சரி, அவற்றின் கடந்த கால நடவடிக்கைகள் யாவும் பேரினவாதத்தின் வெளிப்பாடாகவே இருந்தது. இறுதியாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்பு கூட ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்க சுதந்திரக் கட்சி உட்படஎக்கட்சியும் தயாராக இருக்கவில்லை. என்பதே இக்கட்சிகள் பற்றி விளங்கிக் கொள்ளப் போதுமானதாகும்.

தற்பொழுதும், சுதந்திரக்கட்சி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளதே ஒழிய எவ்வாறு தீர்வு காணப்பட வேண்டும் என்றோ, எப்படிக் காணப்பட வேண்டும் என்றோ கூறவில்லை.

# வடமாநில சட்டசபைத் தேர்தல்கள்: வென்றது யார்? தோற்றது யார்?

கடந்த பல தேர்தல்களில் இடம்பெற்றது போல் இம்முறை உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் மற்றும் தலைநகர் டில்லி ஆகியவற்றிற்கான தேர்தல்களில் அதிகார துஷ்பிரயோகம் அது தொடர்பான மற்றும் பல முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்றே கூறலாம். நடைமுறையில் இருந்த சட்டம் மற்றும் ஒழுங்குகள் ஒவ்வொன்றும் பெருமளவுக்கு சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் பேணப்பட்டது. இதன் மூலமாக சாதாரண பொதுமக்கள் ஜனநாயக முறையின் மீது நம்பிக்கை கொள்வது மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இம் முறை தேர்தல் முடிவுகளை அவதானிக்கும்போது வாக்காளர்கள் எல்லா இடத்திலும் ஒத்த தன்மையான கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பதையும், பெரிய கட்சிகளின் கவர்ச்சிகளுக்கு கட்டுப் படவில்லை என்பதையும் புரிந்துகொள்ள முடியும். பாரதீப ஜனதாக் கட்சி இமாசலப் பிரதேச மாநிலத்தில் தோற்கடிக்கப்பட்டதும், காங்கிரஸ் கட்சி தலைநகர் டில்லியில் பலத்த பின்னடைவைச் சந்தித்ததும், ராஜஸ்தானில் பாரதீய ஜனதா தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து உள்ளபோதும் காங்கிரஸ்கட்சி சவால் விடும் வகையில் பலம் பெற்றிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. எப்படியாயினும் கடந்த தடவை 1990இல் இடம்பெற்ற தேர்தலோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் காங்கிரஸ் கட்சி ஐம்பது சதவீதத்துக்கும்அதிகமான வாக்குகளைக் கவர்ந்துள்ளது,

உத்தரப் பிரதேச மாநிலத்தைப் பொறுத்த வரை இது வரை கிடைத்த முடிவுகளின் படிபகுஜன்சமாஜக்கட்சிசமாஜவாதி ஜனதாக் கட்சிகள் கூட்டணி ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்றிருக்கிறது இம் மாநிலத்தில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக பாரதீய ஜனதாபரிணமித்துள்ளபோது காங்கிரஸ் கட்சியோ மூன்றாம் இடத்திற்கே தள்ளப்பட்டு விட்டது. 1990 ஆம் ஆண்டுத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் காங்கிரஸ் கட்சி இங்கு பலத்த பின்னடைவைக் கண்டிருக்கிறது. முஸ்லிம் வாக்காளர்கள் வாக்களித்துள்ள விதம் இம் மாநிலத்தின் எதிர்கால அரசியல் தொடர்பாக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

> இந்திய தேர்தல்கள் ஒரு பார்வை என்ற தலைப்பின் கீழ் இந்திய வானொலியின் அரசியல் விமர்சகர் கே. எல். இராம மூர்த்தி எழுதியுள்ள குறிப்பின் மொழியாக்கம் இது.

இந்த மாநிலத்தின் சுமார் ஏழுகோடி வாக்காளர்களில் சுமார் 17 சதவீதமானோர் முஸ்லிம்வாக்காளர்களாவர். அவர்கள் காங்கிரஸ் கட்சியின்மீது வெறுப்பையும், பாரதீய ஜனதா மீது கோபத்தையும்கொண்டுள்ளனர். இதனை நன்குபயன்படுத்தியதாலேயே பகுஜன் சமாஜ்கட்சி சமாஜவாதி ஜனதாக் கூட்டணி இத்தகைய அமோக ஆதரவை பெறமுடிந்துள்ளது.

ஜனதா தள் கட்சியை பொறுத்தவரை உத்தரப் பிரதேசம், ராஜ்ஸ்தான், மற்றும் டில்லி தேர்தல்களில் சிறியளவு பிரசன்னத்தையே காட்ட முடிந்துள்ளது. இம் மூன்று சட்டப்பேரவைகளிலும் மிகச் சிறியளவு ஆசனங்களையே இக்கட்சி பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில் மத்திய அரசில் அதிகாரத்தில் இருந்ததும், தற்போதும் இரண்டு மாநிலங்களில்ஆட்சி செய்து வருவதுமான இக்கட்சி இத் தேர்தல் முடிவுகளையடுத்து முக்கியத்துவத்தை இழந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதே போல சிவசேனைக் கட்சியின் எதிர்பார்ப்புகளுக்கும் இத்தேர்தல் மூலம் பலத்த அடி கிடைத்துள்ளது.

கடந்த இரு தசாப்தங்களாக செயற்படும் பகுஜன் சமாஜ்கட்சி கன்சிராம் தலைமையில் உத்தரப் பிரதேசத்தில் இத்தகைய பெருமளவு ஆசனங்களை பெற்றிருப்பது இதுவே முதற் தடவையாகும்

## பட்டம் பெற்றனர்

திரு. மா. சின்னத்தம்பி அவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் பொருளியலில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறை விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் இவர் இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியும், பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கங்களும் பற்றிய தனது ஆராய்ச்சிக்காகவே இப்பட்டத்தைப் பெறுகிறார்.

செல்வி யோகேஸ்வரி கந்தையா கல்வியியலில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் ''யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழலையர் கல்வியின் இன்றைய நிலை'' என்ற ஆய்வுத் தலைப்பில் தமது ஆராய்ச்சியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்து இப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

எமது பிரதேசத்துக்குரிய பாலர் கல்வியைத் திட்டமிடுவதற்கு இந்த ஆராய்ச்சி பெரிதும் உதவுவதாக அமையும். செல்வி யோகேஸ்வரி கந்தையா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் உப அதிபராகத் தற்போது பணிபுரிகிறார்.

# உத்தரப்பிரதேசத்தில் சமபலம்; ஆட்சி அமைப்பதில் இழுபறி

(டில்லி)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் தம்மால் ஆட்சி அமைக்க முடியும் என்று பாரதீய ஜனதாக் கட்சியும் சமாஜவாதி ஜனதா-பகுஜன் சமாஜக்கட்சிக்கூட்டணியும்தனித்தனியே கூறியுள்ளன. இக் கட்சிகள் ஒவ்வொன்றும் முறையே177 176 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன. பாரதீய ஜனதாக் கட்சி தனிப்பெரும் கட்சியாக 177 ஆசனங்களைப் பெற்றுள்ள போதும் ஒத்த கருத்துடைய கட்சிகளின் ஆதரவுடன் தமது கட்சிக்கு தெளிவான பெரும்பான்மை இருப்பதாக பகுஜன் சமாஜ் மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சிக் கூட்டணியின் தலைவரான முலாயம் சிங் யாதவ் கூறியுள்ளார் ஒவ்வொன்றும் 28 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள காங்கிரஸ் ஜனதாதள், மற்றும் சி.பி.ஐ சி.பி எம் போன்ற ஒத்தகருத்துடைய கட்சிகளின் ஆதரவு தமக்கு கிடைத்திருப்பதாக முலாயம் சிங் யதாவ் பி.ரி.ஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் லக்னோவில் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் கான்சிராமுடன் இணைந்து ஆளுநரைச் சந்தித்த முலாயம் சிங் யதாவ் ஆட்சி அமைப்பதற்கு உரிமை கோரினார் இதே வேளை உத்தரப் பிரதேசமாநிலத்தில் ஆட்சி அமைக்க பாரதீயஜனதாவும் உரிமை கோரியுள்ளது உத்தரப்பிரதேச ஆளுநரை சந்தித்த மாநில பாரதீய ஜனதா தலைவர் கல்ராஜ் மிசோராவும் முன்னாள் மாநில முதல்வர் கல்யான் சிங்கிற்கும் தனிப்பெரும் கட்சியாக பாரதீய ஜனதா உருவெடுத்திருப்பதால் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு தமக்கு அளிக்கப்படவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

## ராஜஸ்தானில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முயற்சி

(டில்லி)

ராஜஸ்தான் மாநிலத்தில் ஆட்சி அமைக்கும் முயற்சி ... தீய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் ராம்தாஸ் அகர்வால் மாநில ஆளுநரை

## நாடு யுத்த வலயம்; நடமாட முடியாத நிலை

### எதிர்கட்சி உறுப்பினர் கண்டனம்

(கொழும்பு)

நாடு முழுவதும்யுத்த வலயமாக மாறி வருகின்றது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூட சுதந்திரமாக கொழும்பில் நடமாட முடியாத நிலை இன்று உள்ளது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய் சுதந்திரக் கட்சி எம். பியான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று இலங்கை முழுவதும் சுதந்திர வலயமாக மாறியுள்ளது என அரசதரப்பினர் கூறுகின்றனர். ஆனால் நாடு முழுவதும் இன்று ஒரேயுத்த வலயமாகவேயுள்ளது.

இராணுவத்தில் சேர்ந்து பயிற்சிபெற்ற பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினம் நாட்டின் பலபகுதிகளிலுர் ஓடி ஒளித்துள்ளனர், சுமார் பதினையாயிரம் இளைஞர்கள் நாடுமுழுவதும் தலைமறைவாகியுள்ளனர். நாட்டின் யுத்த நிலை பற்றி எவருக்கும் சரிவர உணர்த்தப்படவில்லை. மக்களுக்கு உண்மை தெரியாது. இதனாலேயே இன்று இளைஞர்கள் இராணுவத்திலிருந்து தப்பி ஓடுகின்றனர் என்றார்.

## கட்டணம் செலுத்தாத கப்பல்கள் எலத்தில்

இந்தவகையில் சுதந்திரக்கட்சியின் தீர்மானமானது சிங்களவரின் அரசியலில் புதியதொரு பரிணாமமாயினும், இனப்பிரச்சினை தீர்வு என்பதற்கு பெரும் தொலைவு வரை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட சிங்கள அரசியல் கட்சிகள் முன்னேற வேண்டும் என்பதே யதார்த்த நிலையாகும். ஆனால் இது அக்கட்சிகளால் முடியுமா என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில், சுதந்திரக்கட்சியும் சரி, ஏனைய சிங்களக்கட்சிகள் எதுவாக இருப்பினும் சரி, அவற்றின் கடந்த கால நடவடிக்கைகள் யாவும் பேரினவாதத்தின் வெளிப்பாடாகவே இருந்தது. இறுதியாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்பு கூட ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்க சுதந்திரக் கட்சி உட்படஎக்கட்சியும் தயாராக இருக்கவில்லை. என்பதே இக்கட்சிகள் பற்றி விளங்கிக் கொள்ளப் போதுமானதாகும்.

தற்பொழுதும், சுதந்திரக்கட்சி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளதே ஒழிய எவ்வாறு தீர்வு காணப்பட வேண்டும் என்றோ, எப்படிக் காணப்பட வேண்டும் என்றோ கூறவில்லை. இந்நிலையானது சுதந்திரக்கட்சி இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை காட்டுகின்றதா, அன்றி தற்பொழுது ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழ்நிலையில் புதிதாக அரசியல் சதுரங்கம் ஒன்றைத் ஆட முற்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுகின்றது.

அதாவது பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முடியாமல் போனமையும், இனப்பிரச்சினை என்பது இலங்கையில் இல்லை என்ற டி. பி. விஜேதுங்காவின் அறிவிப்பும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன. இது அவர்களுக்கு அரசியல் துறவறம் பூணவேண்டிய நிர்பந்தத்தையும் கொண்டுவந்துள்ளது. இந்நிலையில் அரசியலில் தமது இருப்பை உறுதி செய்து கொள்ள எந்தவொரு சிறு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள தமிழ் குழுக்கள் தயாராகவே உள்ளன:

இதேபோன்றே அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கும் இடையில், சுமார் 15 வருட காலமாக நிலவிவந்த நல்லுறவில் விரிசல் ஏற்படும் நிலையும் உருவாகியுள்ளது. இவ் விரிசல்எந்த வேளையிலும் அமைச்சர் தொண்டமான் அரசாங்கத்தில் இருந்துவெளியேறலாம் என்ற நிலையும் உருவாகியுள்ளது

இதன் அடிப்படையிலேயே சுதந்திரக்கட்சியின் தீர்மானம் குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதாவது அரசாங்கத்தின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கையால் போக்கிடமின்றி நடுவழியில் நிற்கும் தமிழ்க்குழுக்களையும், டி. பி. விஜேதுங்காவின் புறக்கணிப்பால் அதிருப்தியுற்றுள்ள தொண்டமானையும்சேர்த்துக்கொள்வதன் மூலம் தனது வாக்கு வங்கியினை நிரப்பமேற்கொண்டுள்ள முயற்சியே சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற கோசமாகும்.

இந்நிலையானதுஐக்கிய தேசியக் கட்சிகொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களையும், அமைச்சர் தொண்டமானையும் வைத்து கடந்த காலத்தில் வியாபாரம்நடத்தியதுபோன்று சுதந்திரகட்சியும் நடத்த முற்படுகின்றதெனலாம். திக்கற்று நிற்கும் தமிழ்க் குழுக்களால் இவ்வியாபாரத்தில்லாபம் இல்லாது விட்டாலும் தொண்டமான் இணைந்தால் சற்று முன்னேறலாம். ஆனால் இதில் எவையும் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதுமில்லை தமிழ் மக்களை ஏமாற்றிவிடப் போவதுமில்லை. ஏனெனில் இனப்பிரச்சினைத்தீர்வு எது என்பதை தீர்மானிப்பது தமிழ் மக்களே ஒழிய கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களோ அன்றி சிங்கள அரசியல் கட்சிகளோ அல்ல.

(டில்லி)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் தம்மால் ஆட்சி அமைக்க முடியும் என்று பாரதீய ஜனதாக் கட்சியும் சமாஜவாதி ஜனதா-பகுஜன் சமாஜக்கட்சிக்கூட்டணியும்தனித்தனியே கூறியுள்ளன. இக் கட்சிகள் ஒவ்வொன்றும் முறையே177 176 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன. பாரதீய ஜனதாக் கட்சி தனிப்பெரும் கட்சியாக 177 ஆசனங்களைப் பெற்றுள்ள போதும் ஒத்த கருத்துடைய கட்சிகளின் ஆதரவுடன் தமது கட்சிக்கு தெளிவான பெரும்பான்மை இருப்பதாக பகுஜன் சமாஜ் மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சிக் கூட்டணியின் தலைவரான முலாயம் சிங் யாதவ் கூறியுள்ளார் ஒவ்வொன்றும் 28 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள காங்கிரஸ் ஜனதாதள், மற்றும் சி.பி.ஐ சி.பி எம் போன்ற ஒத்தகருத்துடைய கட்சிகளின் ஆதரவு தமக்கு கிடைத்திருப்பதாக முலாயம் சிங் யதாவ் பி.ரி.ஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் லக்னோவில் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் கான் சிராமுடன் இணைந்து ஆளுநரைச் சந்தித்த முலாயம் சிங் யதாவ் ஆட்சி அமைப்பதற்கு உரிமை கோரினார் இதே வேளை உத்தரப் பிரதேசமாநிலத்தில் ஆட்சி அமைக்க பாரதீயஜனதாவும் உரிமை கோரியுள்ளது உத்தரப்பிரதேச ஆளுநரை சந்தித்த மாநில பாரதீய ஜனதா தலைவர் கல்ராஜ் மிசோராவும் முன்னாள் மாநில முதல்வர் கல்யான் சிங்கிற்கும் தனிப்பெரும் கட்சியாக பாரதீய ஜனதா உருவெடுத்திருப்பதால் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு தமக்கு அளிக்கப்படவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

# ராஜஸ்தானில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முயற்சி

(டில்லி)

ராஜஸ்தான் மாநிலத்தில் ஆட்சி அமைக்கும் முயற்சியில் இந்திரா காங்கிரஸ் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு 76 இடங்களும் பாரதீய ஜனதாவிற்கு 93 இடங்களும், சுயேட்சைகளுக்கு 22 இடங்களும் ஏனையவை ஜனதாதள் மற்றும் இடதுசாரிகளுக்கும் கிடைத்துள்ளன.

சட்டப்பேரவை இடங்கள் 200ஐக் கொண்ட இம் மாநிலத்தில் 199 இடங்களுக்கு தேர்தல் நடைபெற்றது. மாநிலத்தில் 93 இடங்களைப் பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் ராம்தாஸ் அகர்வால் மாநில ஆளுநரை ஜெய்ப்பூரில் சந்தித்த போது கையளித்த கடிதத்தில் பைரான் சிங் செக்காவத் தலைமையில் ஆட்சி அமைப்பதற்கு பாரதீய ஜனதா அழைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், பாரதீய ஜனதாவின் ஆதரவு பெற்ற மூன்று சுயேட்சை உறுப்பினர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும் சுயேட்சை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆட்சியை அமைப்பதற்கு காங்கிரஸ் கட்சி பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

## பேச்சுவார்த்தைக்கு கண்டனம்

(லண்டன்)

ஐரிஷ்குடியரசு இராணுவம் எனப்படும் ஐ. ஆர். ஏயுடன் பிரிட்டிஷ் அரசு பேச்சுவார்த்தை நடத்துவதை வடஅயர்லாந்திலுள்ள புரட்டஸ்தாந்து அமைப்புக்கள் கண்டனம் செய்துள்ளன. இதே வேளை நான்கு வாரங்களுக்கு பின்னர் 47 வயதான கத்தோலிக்கர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு புரட்டஸ் தாந்து சுதந்திர போராளிகள் அமைப்பு உரிமை கோரியுள்ளது.

(கொழும்பு)

நாடு முழுவதும்யுத்த வலயமாக மாறி வருகின்றது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூட சுதந்திரமாக கொழும்பில் நடமாட முடியாத நிலை இன்று உள்ளது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய் சுதந்திரக் கட்சி எம். பியான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று இலங்கை முழுவதும் சுதந்திர வலயமாக மாறியுள்ளது என அரசதரப்பினர் கூறுகின்றனர். ஆனால் நாடு முழுவதும் இன்று ஒரேயுத்த வலயமாகவேயுள்ளது.

இராணுவத்தில் சேர்ந்து பயிற்சிபெற்ற பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் நாட்டின் பலபகுதிகளிலும் ஓடி ஒளித்துள்ளனர், சுமார் பதினையாயிரம் இளைஞர்கள் நாடுமுழுவதும் தலைமறைவாகியுள்ளனர். நாட்டின் யுத்த நிலை பற்றி எவருக்கும் சரிவர உணர்த்தப்படவில்லை. மக்களுக்கு உண்மை தெரியாது. இதனாலேயே இன்று இளைஞர்கள் இராணுவத்திலிருந்து தப்பி ஓடுகின்றனர் என்றார்.

# கட்டணம் செலுத்தாத கப்பல்கள் ஏலத்தில்

(கொழும்பு)

துறைமுகக் கட்டணங்களையும் துறைமுக சேவைக்கான கட்டணங்களையும் செலுத்த தவறிய பத்துக்கப்பல்கள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன தற்போது கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இக்கப்பல்களை ஏலத்தில் விற்க ஒழுங்குகள் செய்யப்படும் வரை இக்கப்பல்களை காலி அல்லது திருமலை துறைமுகங்களுக்கு எடுத்து செல்லுமாறு துறைமுகங்கள்கப்பல்துறை அமைச்சர் பணித்துள்ளார்

இக்கப்பல்களுக்கான பணத்தை செலுத்துமாறு நாம் பலமுறை இக்கப்பல் முகவர்களிடம் கேட்டோம்அவர்கள் எவ்விதநடவடிக்கையும் எடுக்கவில்லை துறைமுக அதிகார சபைக்குசேரவேண்டியபணம் கப்பல்களின் பெறுமதியிலும் கூடுதலானதாகும் சிலகப்பல்கள் இருவருடத்திற்குமேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# உபகரணங்களை விட்டுவிட்டு திருடன் தப்பி ஓட்டம்

(நமது நிருபர்)

திருடவந்தவர் தான் வந்த சைக்கிளையும் தனது சேட் மற்றும் கதவுகளை உடைக்க வல்ல இரும்பு சலாகை ஒன்றையும் விட்டுவிட்டு ஓடிய சம்பவமொன்று நேற்று முன்தினம் கொக்குவில் ஞான பண்டித வித்தியாலயத்திற்கு அண்மையில் நடந்துள்ளது.

ஞானபண்டித வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள புதுவீதியில் அமைந்துள்ள இருகடைகளுக்கு அருகில் வீட்டு சுவர் ஒன்றுடன் பூட்டிய நிலையில் லுமாலா சைக்கிள் ஒன்றும் அதன் கான்டிலில் கொழுவிய நிலையில் சேட்டும் அருகே சுவரில் சாத்திய நிலையில் இரும்பு சலாகை ஒன்றும் கிடப்பதை கண்ட அப்பகுதி மக்கள் கூட்டமாக நின்று பார்வையிட்டதை காணக்கூடியதாக இருந்தது. திருடன் ஏன் இவற்றை விட்டுவிட்டு ஓடினான் என்பது அவ்விடத்தை சேர்ந்த மக்கள் எவருக்கும் புரியா புதிராகவே உள்ளது.

(சி)

# மிலேச்சத்தன தாக்குதல்கள் சம்மேளனம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் கூடும் இடங்கள், மற்றும் செயலகங்கள், வைத்திய சாலைகள், மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மீது சிறிலங்கா அரச படையினர் நடத்தும் மிலேச்சத்தனமான தாக்குதல்களை யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனம் மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

அண்மையில் சுப்பசொனிக் மற்றும் புக்காராபோன்றயுத்தவிமானங்களின் மிலேச்சத்தனமான குண்டுவீச்சுக்களை கண்டித்து இச் சம்மேளனத்தினால் சர்வதேசசெஞ்சிலுவை சங்கசெயற்குழுமூலம்ஜனாதிபதி டி பி விஜேதுங்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒரு மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இத் தகைய தாக்குதல்களை சிறிலங்கா அரசு தொடர்ந்தும் அனுமதிப்பது நாகரிக உலகமே வெட்கப்பட வேண்டிய - தலைகுனிய வேண்டிய ஒரு செயலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க.பொதுக்குழு உறுப்பினர் தொகை அதிகரித்தது எவ்வாறு?

## கருணாநிதியிடம் கேள்வி

தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 850 ஆக இருந்தது 1125 ஆக மாறிய காரணம் என்ன இவ்வாறு தி மு. க. தலைவர் கருணாநிதிக்கு, வை. கோபாலசாமி கேள்வி விடுத்துள்ளார்.

பெருந்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய வை கோபாலசாமி பேசியதாவது,

இது தமிழன் பூமி, புண்ணிய பூமி நீதியைப்பாதுகாக்கும் பூமி என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பும் நீதியுள்ளது என்பதை உணர முடிகிறது.

அகில உலகமே அறிந்திடும் வகையில் சாதாரண தொண்டனுக்காக இவ்வளவு தொண்டர்கள் ஆதரவு என்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

ஏசுபெருமானைக் கூட கொல்வதற்குமுன் விசாரணை நடத்தினார்கள். ஆனால் எனக்கு விசாரணை இல்லை.

ஜெயலலிதா ஆட்சி நீடிக்க வேண்டும் என்றும் காங்கிரசுடன் உறவு வைத்துக் கொள்வது பற்றியும் நீங்கள் எப்படி பேசலாம். கட்சி அனுமதி கொடுத்திருக்கிறதா? நீங்கள் எதைச் சொன்னாலும் கட்சி கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

சுப்பிரமணிய சுவாமியின் அறிக்கையை நாள் தோறும் முரசொலியில் போடலாம் என் பேச்சைப் போடவில்லை.

850 பொதுக்குழு உறுப்பினர்கள் 1125 உறுப்பினர்களாக மாற என்ன காரணம்? பொதுக்குழு உறுப்பினர்கள் என்ன மிருகக்காட்சிசாலையில் இருப்பவர்களா பொதுக்குழு தான் உங்களைத் தலைவராக தேர்ந்தெடுத்தது- அநீதிக்கு துணை போய், நீதியை குழி தோண்டிப் புதைத்து விடாதீர்கள்- இவ்வாறு அவர் பேசினார்-

# கோபாலசாமியுடன் எவரும் தொடர்பு கொள்ளக்கூடாது

## தி. மு. க. பொதுச்செயலாளர் அறிவிப்பு

தி.மு.க விலிருந்து வை. கோபாலசாமி நீக்கப்பட்டுள்ளார். அவருடன் தி மு க உறுப்பினர்கள் எவரும் தொடர்புகொள்ளக்கூடாதுஎன்று தி.மு.க வின் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

வை கோபாலசாமி கட்சியின் கட்டுப்பாட்டை மீறிவிட்டார். அதனால் அவரை தி மு கவின் சகல பொறுப்புகளிலிருந்தும் நீக்கிவிட்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிகள் உதவுவர் என நம்பியே தி.மு.க வை பிளவுபடுத்த முயற்சி

## வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாத சக்திகள ஒன்று சேர்ந்து தமக்கு உதவியாக செயற்படும் என்ற நம்பிக்கையிலேயே தி.மு.க வை பிளவுபடுத்த முயல்கின்றனர் என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளர்களிடையே பேசும்போதே வாழப்பாடி இவ்வாறு தெரிவித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் குறைந்தளவு வெற்றிபெற நேர்ந்தமைக்கான காரணங்களை கட்சி மேலிடம் விசாரித்து உடனடியாக தச்ச நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கைவிடுத்தார் வடஇந்தியாவில் காங்கிரஸ் குறைந்தளவு இடங்களில் வெற்றி பெற்றமைக்கு காங்கிரஸ் செயற்குழு முழுவதுமே பொறுப்பேற்று இராஜினாமா செய்யவேண்டும் என மத்திய அமைச்சர் குமாரமங்கலம் கூறிய யோசனையை தாம் ஏற்கவில்லை எனவும் அதேசமயம் அவரின் வேறு சில யோசனைகளை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் இராமமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

## இன்று வருகை தரவும்

''கோமாரிகப்பல்'' இன்று பகல் 12.00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்து திருக்கோணமலைசெல்ல விருப்பதினால் இக்கப்பலில் பிரயாணம் செய்வதற்காக தமது பெயர்களை செயலகத்தில் பதிவு செய்தவர்கள் பகல் 11.00மணிக்குதவறாது பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும்படிதிட்டப்பணிப்பாளர் செ பத்மநாதன் கேட்டுள்ளார்.

## நினைவுப் பேருரை

வைத்தியகலாநிதி அருணாசலம் சிவபாதசுந்தரம் நினைவுப்பேருரை யாழ் பல்கலைக்கழகத்திலே கைலாசபதி கலையரங்கில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வாண்டு இப்பேருரையை சமூக மருத்துவத்துறை தலைவர் கலாநிதி என். சிவராசா அவர்கள் நிகழ்த்தவுள்ளார் 'நமது பிள்ளைகளின் ஊட்ட நிலைமை' என்னும் பொருள் பற்றி இப்பேருரை அமையும்.

## மதிப்பீடு

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆண்டு 3, 4, 5 பொதுப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி இன்று காலை 9 மணிமுதல் வட்டு இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய மதிப்பீட்டு நிலையங்களில் ஆரம்பமாகும். இம் மதிப்பீட்டுப் பணிக்கு ஆண்டு 3ல் கற்பிக்கும் ஆசிரியர்களை இன்றும், ஆண்டு 4, 5ல் கற்பிக்கும் ஆசிரியர்கள் நாளையும் தவறாது சமுகமளிக்க வேண்டுமென்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பரீட்சை நிலையங்களில் மாற்றம் குறித்து அறிவிப்பு

எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவிருக்கும் க.பொ.த. (சா-தர) பரீட்சைக்கான யாழ் மாவட்ட பரீட்சை நிலையங்களில் சில மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதன்படியாழ்.குளமங்கால் றோ.க.த.க. பாடசாலையில் அமைந்துள்ள பரீட்சை நிலையம் யாழ் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திற்கும், யாழ் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையம் யாழ். நல்லூர் இந்து த. பெண்கள் பாடசாலைக்கும், யாழ். கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய மண்டபம்-1 யாழ் கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்திற்கும், யாழ். கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய மண்டபம்-2 யாழ் பெரியபுலம் மகாவித்தியாலய மண்டபம்-2ற்கும் யாழ். வேலாயுதம் மக வித்தியாலய மண்டபம்-2 யாழ். தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம் பருத்தித்துறைக்கும் மாற்றம்செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய பரீட்சார்த்திகள் மாற்றம் செய்யப்பட்ட பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குதோற்றுமாறும் யாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)



## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 01- 12- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11587

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3146, 28-9449, 26 6075, 43-1019, 26-9186, 27-4301, 24-7087, 27-0922.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்:

28-9633, 24-4207, 42-3419, 27-2016, 42-3267, 26-5281, 41-4194, 40-7584, 26-2502.

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவருக்கு 02-12-93 தொடக்கம் 05-12-93 வரை காலை 9-00 மணி — 1-00 மணி வரை மண்ணெண்ணெய் மாணவர் அவை அலுவலகத்தில் வழங்கப்படும்,

(6753) மாணவர் அவை

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து அணு மருத்துவத் (பௌதிகவியல்) தில் தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1993 - 12 - 24 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

4585/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1993 திசெம்பர் 31 ஆம் திகதி வரை.

5270/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1994 சனவரி தொடக்கம்.

குறிப்பு: இதற்கு மேல



# வேலூர் நகர தி.மு.க அலுவலகத்தை கைப்பற்ற வை. கோ. குழு முயற்சி

## தடியடியில் நால்வர் காயம்; 85 பேர் கைது

(சென்னை)

வேலூரில் உள்ள நகர தி.மு. க. அலுவலகத்தை கைப்பற்ற முனைந்த வை கோபாலசாமியின் ஆதரவாளர்கள் மீது நேற்று பொலிசார் தடியடிப்பிரயோகம் நடத்தினர் இதில் நால்வர் காயமடைந்தனர்.

நேற்றுமாலை நடைபெற்ற இச்சம்பவத்தையடுத்து வேலூர் தி. மு. க அலுவலகம் நேற்று பொலிசாரால் சீல்வைக்கப்பட்டது. இச்சம்பவத்திற்கு முன்பாக மாவட்டத்தின் தி. மு. க செயலரும் இராஜ்யசபா உறுப்பினருமான முகமட்தகிர் என்பவர் உட்பட 85பேர் பொலிசாரால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்திருந்தனர் இச்சம்பவங்களையடுத்து வேலூரில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## விஞ்ஞான மதிப்பீட்டுபரீட்சை

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 4, 5 மாணவர்களுக்கான தொடக்க விஞ்ஞானம் மதிப்பீட்டுப் பரீட்சை இன்று நடைபெறும் இதற்கான அறிவுறுத்தல்கள் யாவும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பரீட்சைப் பணிக்குழுவிற்கு அறிவுறுத்தற் கூட்டம்

1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாக இருக்கும் க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு நியமிக்கப்பட்டுள்ள பரீட்சைப் பணிக்குழுவினர்கட்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமைகீழ்க்காணும் இடங்களில் நடைபெறவுள்ளன.

யாழ். இந்துமகளிர்கல்லூரியில் காலை 10-30 மணிக்கு, யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரிக் கோட்ட பிரதேசத்தில் உள்ள பரீட்சை நிலைய பரீட்சைப்பணிக்குழு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 2-30 மணிக்கு சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய்க் கோட்டப்பிரதேசத்தில் உள்ள பரீட்சை நிலையப் பரீட்சைப் பணிக்... பங்குகொள்ளும்படி யாழ் கல்விப்பணிப்பாளர் அறிவிக்கின்றார். மேலும் நாளை 9-00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெற இருந்த பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் பெரும்பான்மை!

(டில்லி)

முந்நூற்றி இருபது உறுப்பினர்களைக் கொண்ட மத்தியப் பிரதேச சட்டசபைத் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்ற 305 முடிவுகளில் இந்திரா காங்கிரஸ் 170 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. ஆனால் உத்தியோகபூர்வ முடிவுகள் 202இடங்களுக்கு மாத்திரமே கிடைத்துள்ளன இதன்படி இந்திரா காங்கிரஸ் 114 இடங்களைப் பெற்றுள்ளது. பாரதீய ஜனதாக் கட்சி 71 இடங்களையும், பகுஜன் சமாஜ் 7 இடங்களையும், ஜனதா தளம் 2 இடங்களையும் பெற்றுள்ளன கம்யூனிஸ் கட்சிஒன்று. சுயேட்சைவேட்பாளர்களும் மற்றவர்களும் 7 தொகுதிகள் பெற்றுள்ளனர்.

## சாரணர் கூட்டம்

புனித யாகப்பர் ஆலயம் தாக்குண்டது தொடர்பான சாரணர்களுக்குரிய கூட்டம் நாளை காலை 7.30மணிக்கு புனித யாகப்பர்ஆலயப் பணிமனையில் நடைபெறும். அதில் சகலசாரணர்களையும் பங்குபற்றுமாறு மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார்.

### பரீட்சை

பட்டு யாழ் கல்வித் திணைக்களம் கொண்டுவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (பா),(நி)

### முருங்கன்

புக்காராவிமானம் ஒன்றுமுருங்கன் பகுதியை வட்டமிட்டு இருகுண்டுகளை வீசியது இவ்விரு குண்டுகளும வீழ்ந்து வெடித்ததினால் ம செல்வராசா(வயது55) மற்றும் இவரது மகளான செ. விஜி (வயது22) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்

### பாடசாலைகளில்

ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டு அவர் பதவி ஏற்ற பின்னரே குறிப்பிட்ட ஆசிரியரை இடமாற்றம்செய்யவேண்டும்என வும் சபை பணித்துள்ளது.

### இலங்கை

...து முதல் விளக்கமாக எடுத்து கூறவேண்டும் எனவும் அத் மேலும் ஐ.நாவை சண்டி துள்ளது. கடந்தசில மாதங்களுக்கு முன் அனுப்பப்பட்ட அகதிகள் ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராலய முகாமில் தங்கியிருந்தபோது அவர்கள் 24மணிநேரம் பட்டினி கிடக்க விடப்பட்டதை

### வெள்ள

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து, இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணத்தைப் பெற்றுவருவோருக்கு இவ் வெள்ள நிவாரணம் வழங்கப்படமாட்டாது என சமூக சேவைகள் பிரிவு அறி

### புலிகளின்

தாக்குதலேகாரணம்.டோரா படகுகளால் கரையை அண்மிக்கவும் முடியவில்லை.

கடற்படைத் தளபதி தனது மூத்த அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்தபின்னர் நாகதேவன்துறை கடற்படை முகாமை கைவிடுவது என முடிவுசெய்தார். மறுநாளும் கல்முனை அருகே அதிரடிப் படையினரை கடல்வழியாக தரையிறக்க எடுத்த முயற்சி கைகூடவில்லை. உதவிப் படைகள் கடற்கரையில் காலூன்ற விடக்கூடாதுஎன்ற உறுதிப்பாட்டுடன் புலிகள் போரிட்டனர். இதில் முக்கிய பிரச்சினை அருகிலிருந்த ஆனையிறவு முகாம் உதவிக்கு படைஅனுப்ப முன்வரவில்லை அது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதன் அவசியம் காணப்பட்டதே இதற்குக் காரணம். இதனால் கிழக்கிலிருந்தே படையினர் தருவிக்கப்பட்டனர். அதே வேளை புக்காரா விமானம் ஒன்றும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது. விமானியும் காயமடைந்தார்.

பூநகரியில் நடந்த தவறு என்ன? கடல் நீரேரி மீதான கட்டுப்பாட்டிற்கு இராணுவம் கடற்படையைத்தான் நம்பியிருந்தது. கடல்நீரேரி ஆழம்குறைந்தது. அதனால் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்த அதுவாய்ப்பாக இருந்தது. நாகதேவன்துறை கடற்படை முகாமிலிருந்த

27-4301, 24-7087, 27-0922.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்:

28-9633, 24-4207, 42-3419, 27-2016, 42-3267, 26-5281, 41-4194, 40-7584, 26-2502.

# மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவருக்கு 02-12-93 தொடக்கம் 05-12-93 வரை காலை 9-00 மணி — 1-00 மணி வரை மண்ணெண்ணெய் மாணவர் அவை அலுவலகத்தில் வழங்கப்படும்,

(6753) மாணவர் அவை

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சின்னத்துரை

இணுவில் கிழக்கை சேர்ந்த கந்தையா சின்னத்துரை 1-12-93 இல் காலமானார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், இரத்தினசிங்கம் (ஆசிரியர் யா. அருணோதயாக் கல்லூரி), லீலாவதி நடராசா (காணி உத்தியோகத்தர் பாண்டியன்குளம், துணுக்காய்,), சிவயோகம், கந்தசாமி (களஞ்சிய பொறுப்பாளர் நல்லூர், ப. நோ. கூ. சங்கம்), விமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்பலம், காலஞ்சென்ற தியாகராசா இரத்தினசிங்கம் (வெங்கடேஸ்வரா ரான்ஸ்போட்), பத்மராணி, பாக்கிய லட்சுமி ஆகியோரின் மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று (2-12-93) பி.பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இணுவில் கிழக்கு, சி. இரத்தினசிங்கம் (மகன்)
சிவகாமி அம்மன் கோவிலடி. (6754)

## ஆறுமுகம் மார்க்கண்டு

(வீமன்காமம் ஆங்கிலப்பாடசாலை ஓய்வுபெற்ற ஆசிரியர்)

காரைநகரைபிறப்பிடமாகவும், கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மார்க்கண்டு 01-12-93-ல் காலமானார். இவர் சூரியகாந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சூரியகுமார், சூரியவசந்தி ஆகியோரின் தந்தையும், கயிலாய இந்திரனின் மாமனாரும் தர்சிகாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை (02-12-93) (இன்று) பகல் 12-00 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

தகவல்:

கட்டுடை, கயிலாயஇந்திரன்
மானிப்பாய். (6751)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து அணு மருத்துவத் (பௌதிகவியல்) தில் தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1993 - 12 - 24 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

4585/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1993 திசெம்பர் 31 ஆம் திகதி வரை.

5270/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1994 சனவரி தொடக்கம்.

குறிப்பு: இதற்கு மேலதிகமாக 1994 திசெம்பர் 31 வரை மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றப்படியாக வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவத்தையும் விபரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் நிதிக்கிளையில் 20/- ரூபாவினைச் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக சிரேட்ட உதவிப் பதிவாளரின் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற்றுக் கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகப் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியுடைய காசுக் கட்டளை /தபாற் கட்டளையுடன் 23 × 10 ச. மீ. அளவுடைய 1/- ரூபா முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட கடிதஉறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-11-29
(சி-8038)

மாக இருக்கும் க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு நியமிக்கப்பட்டுள்ள பரீட்சைப் பணிக்குழுவினர்கட்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமைகீழ்க்காணும் இடங்களில் நடைபெறவுள்ளன.

யாழ். இந்துமகளிர்கல்லூரியில் காலை 10-30 மணிக்கு, யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரிக் கோட்ட பிரதேசத்தில் உள்ள பரீட்சை நிலைய பரீட்சைப்பணிக்குழு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 2-30 மணிக்கு சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய்க் கோட்டப்பிரதேசத்தில் உள்ள பரீட்சை நிலையப் பரீட்சைப் பணிக்குழு, வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் முற்பகல் 9-30 மணிக்கு பருத்தித்துறை, பருத்தித்துறை கிழக்கு, கரவெட்டிக் கோட்டப்பிரதேசத்தில் உள்ளபரீட்சைநிலைய பரீட்சைபணிக்குழுநடைபெறவுள்ளது. இவ் அறிவுறுத்தல் கூட்டத்தில் பரீட்சைப் பணிக்குழுவினர்களை தவறாது

### உலக

லான பவள் -30
ஃ ரீ-55 டாங்கி -26
ஃ பீ 432 கவச பாதுகாப்பு உடைய ஆளணி வாகனங்கள் -407
ஃ சலாடின் கவச பாதுகாப்புடைய கார்கள் -10
ஃ செரசன் (புலம்பெயர்வோர்) கவசப் பாதுகாப்புடைய கார்கள் -10

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### வன்னிப்

இதேவேளை கனகராயன் குளத்திலிருந்து பாயும் நீரில் கரப்புக்குத்திப் பகுதியில் வைத்து கடக்க முயன்ற நா. கணேசமூர்த்தி என்பவர் நீரில் மூழ்கி இறந்தார். இவருடன் சென்ற இன்னொருவர் சட்டப்பட்டிருந்த கயிற்றில் பிடித்து தப்பித்துக்கொண்டார்.

ஒட்டுசுட்டான் கலிங்கு பாய்கிறது. குருவிச்சை ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் ஒட்டுசுட்டான் புளியங்குளம், கருவேலன் கண்டல் மக்கள் வெளியேறியுள்ளனர்.

பேராறு பெருக்கெடுத்துப் பாய்வதனால் வசந்தபுரம்மக்கள் இடம்பெயர்ந்துசெல்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஊர்மக்களும் மாணவர்களும் வெள்ளத்தைச் சீர்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்.

கின்றார். மேலும் நாளை 9-00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெற இருந்த பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(பா)

### இலங்கை

து முதல் விளக்கமாக எடுத்து கூறவேண்டும் எனவும் அத் மேலும் ஐ.நாவை சண்டி துள்ளது. கடந்தசில மாதங்களுக்கு முன் அனுப்பப்பட்ட அகதிகள் ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராலய முகாமில் தங்கியிருந்தபோது அவர்கள் 24மணிநேரம் பட்டினி கிடக்க விடப்பட்டதைம் அச் சங்கம் சாடியுள்ளது

இந்திய - இலங்கை நட்புறவுச் சங்கம் இலங்கை அகதிகள் தொடர்பாக வெளியிட்ட இந்த அறிக்கை ஏக காலத்தில் சென்னையிலும், புதுடில்லியிலும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது

### புதிய

அதுவும் அங்கேயே இயங்கும் எனவும் தெரிவித்தார். இதே வேளைகடந்தமாதத்திற்குரிய (நவம்பர்) யாழ். மாவட்ட ஆசிரியர் சம்பளத்தை வழங்குவதற்குரிய கட்டுநிதி நேற்றையதினம் யாழ். கல்வித் திணைக்களத்தினால் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டது

(பா) (17)

### தமிழீழ

சம்பந்தமாகவே மேற்படி பத்திரிகையாளர் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது என்றும் இம்மாநாட்டில் பேசிய அமெரிக்க கோர்ணல்சர் வகலாசாலையின் பேராசிரியர் லோரன்ஸ் ஸ்ரீபன் அவர்கள் பிராந்திய பாதுகாப்புக்கள் இல்லாமல் உலகப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியாது எனத் தெரிவித்தார் என்று அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

இந்த அமைப்பின் தலைவர் பென்சாண்டர் பேசுகையில் அணு ஆயுத உற்பத்திதடை ஒப்பந்தத்திலேயோ அல்லது வேறு எந்த ஒப்பந்தத்திலேயோ இந்தியாவும் பாகிஸ்தானும் கைச்சாத்திடப் போவதுமில்லை இவ்விரு நாடுகளின் இந்த நிலைப்பாட்டின் காரணமாக எழுந்துள்ள அச்சுறுத்தலைக் குறைப்பதற்கான வழிவகைபற்றி அமைப்புஇப்பொழுதும் ஆராய்ந்து வருகின்றது என்றும் தெரிவித்தார் என செய்தி வெளியாகியுள்ளது,

வெடித்ததினால் ம செல்வராசா (வயது55) மற்றும் இவரது மகளான செ. விஜி (வயது22) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்

### பாடசாலைகளில்

ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டு அவர் பதவி ஏற்ற பின்னரே குறிப்பிட்ட ஆசிரியரை இடமாற்றம் செய்யவேண்டும்எனவும் சபை பணித்துள்ளது.

### வெள்ள

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து, இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணத்தைப் பெற்றுவருவோருக்கு இவ் வெள்ள நிவாரணம் வழங்கப்படமாட்டாது என சமூக சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின்பிரதேச செயலாளர்களை தங்கள் தங்கள் நிர்வாகப் பிரிவுகளில் வெள்ளத்தினால் ஏற்பட்டபாதிப்பு பற்றியும் பாதிக்கப்பட்டகுடும்பங்களின் விபரங்களையும் உடனடியாக யாழ் செயலக சமூகசேவைப் பகுதிக்குஅனுப்பிவைக்குமாறு யாழ் செயலக சமூக சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்

ஆனையிறவு முகாம் உதவிக்கு படைஅனுப்ப முன்வரவில்லை அது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதன் அவசியம் காணப்பட்டதே இதற்குக் காரணம். இதனால் கிழக்கிலிருந்தே படையினர் தருவிக்கப்பட்டனர். அதே வேளை புக்காரா விமானம் ஒன்றும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது. விமானியும் காயமடைந்தார்.

பூநகரியில் நடந்த தவறு என்ன? கடல் நீரேரி மீதான கட்டுப்பாட்டிற்கு இராணுவம் கடற்படையைத்தான் நம்பியிருந்தது. கடல்நீரேரி ஆழம்குறைந்தது. அதனால் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்த அதுவாய்ப்பாக இருந்தது. நாகதேவன்துறை கடற்படை முகாமிலிருந்த ஐந்து கடற்படை படகுகளையும் புலிகள் கைப்பற்றியமையானது அவர்களை கடல் நீரேரியில் பலமுள்ளவர்களாக்கி விட்டது. ஆழம் குறைந்தகடலினால் டோரா மற்றும் ஏனைய கடற்படை படகுகளுக்குச் சாதகமாக இருக்கவில்லை.

அத்துடன் பூநகரி பிரதேசம் பாதுகாப்பற்ற பிரதேசம். பெரும்படையினதும் திட்டமிடப்பட்ட தாக்குதலினதும் இலக்கிலிருந்து இது தப்புவது கடினம்.

## நீங்காத நினைவின்

### ஓராண்டு

தாய் மடியில்
17 — 11 — 1976



தாயகமண்ணில்
02 — 12 — 1992

### (கடற்புலிகள்) 2-ம் லெப். மதியழகன்

(சுப்பிரமணியம் கஜேந்திரன்)

மாண்புடனே சுப்பிரமணி பெற்றெடுத்த முத்து
மாவீரன் இவனோ மானிப்பாயினது சொத்து
தலைமுறையின் விடிவிற்காய் களமாடி நின்று
தந்திரிமலை தன்னில் மண்மீது வீழ்ந்திட்ட வித்து

குடும்பத்தினர்

உடுவில் றோட்,
மானிப்பாய். (6755)